புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

ௐ

# இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஅ } யாழ்ப்பாணம்:— தாதுஹூ சித்திரைமீ கநஉ ( 1936 ஏப்ரல் 27 ) திங்கட்கிழமை { இலக்கம்—ரு

## குருவும் சிஷ்யனும்

### ஸ்ரீமத் சுவாமி பிரமானந்தா அவர்கள் கூறிய அறிவமிழ்தம்.

"தினமும் தெய்வத்தை வழிபடு; எதுவரினும் உண்மை பேசு; மின்னையாரை அன்னையரென மதி; மறந்தும் கடவுள் இல்லை என்று கூறுதே."

குரு:— மகனே! நீ நாடோறும் கடவுளை நினைந்து ஏதாவது பிரார்த்தனை, தியானம் ஆகியவற்றைச் செய்து வருகின்றனையா?

சிஷ்யன்:— (சிறிது வெட்கத்தோடு) இல்லை.

குரு:— தினந்தோறும் சிறிது நேரமேனும் இறைவனை யுன்னித் தியானஞ்செய்து வருதல் சாலச் சிறந்ததன்றோ பிள்ளாய்? தியானத்தால் மனம் சாந்தி அடையுமன்றோ? மனவுறுதி ஏற்படுமல்லவா? நீ சமயதீக்ஷை பெற்றுக் கொண்டனையா? இல்லையேல், இனியேனும் விரைவில் பெற்றுக்கொள்ள வேண்டாமோ? இன்றே உன் சமய குரவரை அடைந்து சமய தீக்ஷை பெற்றுக் கொள்வாயாக. எங்ஙனமும் தினமும் சிறிது நேரசத்திற்கேனும் இறைவனைத் தியானஞ் செய்யும் பழக்கத்தைப் பழகிக் கொள்வாயாக. நாடோறும் ஆயிரத்தெட்டு அல்லது நூற்றெட்டு முறையேனும் ஸ்ரீபஞ்சாக்ஷர செபம், செய்துவா. எத்தனை முறை இன்னும் அதிகமாக உன்னால் பஞ்சாக்ஷர செபம் செய்யமுடியுமோ அத்தனை முறை செய்து வருகுதி. அது உன் வேட்கையைப் பொறுத்தது.

சிஷ்யன்:—பஞ்சாக்ஷரம் ஒழிந்த ஏனைய மந்திரங்கள் செபிக்கத்தக்கன அல்லவோ என்று அருளல் வேண்டும்.

குரு:—குழந்தாய்! இறைவனது எண்ணில்லாத திருநாமங்களில் எது உன் மனத்தைக் கவர்கின்றதோ அதனை நீ ஜெபித்துக்கொண்டுவாலாம். எந்தத் திருநாமம் உன் உள்ளத்தைப் பக்தியால் கரையச்செய்கின்றதோ அதனை நீ உன் ஜெபத்திற்குரிய மந்திரமாகக் கொள்ளலாம்

சிஷ்யன்:— சுவாமீ! தியானஞ் செய்வதற்கு ஓர் உருவம் வேண்டாமோ? எவ்வுருவத்தை யான் தியானிப்பேன் எவ்விடத்தில் இருந்து தியானிப்பேன். அருளுதல் வேண்டும்.

குரு:— எவ்வாறு இறைவனது எண்ணில்லாத திருநாமங்களில் உன் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் ஒன்றை உன் மந்திரமாகத் தெரிந்து கொள்வாயோ, அவ்வாறே, எப்பெருமானது உருவத்திருமேனிகளில் எது உன் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றதோ அதனையே நின தியான மூர்த்தமாகக் கொள்ளுதி. இது புறத்தே செய்யப்படும் தியானமாகும். இவ்வாறே அகத்தே செய்யப்படும் தியானமும் ஒன்று உளது. அஃது எவ்வாறே வெனில், புறத்தே பூவும் நீரும், சந்தனமும் கர்ப்பூரமும் பிறவுங்கொண்டு பூசனை உஞற்றுவது போல, அகத்தேயும், நின் மனமாகிய திரையில் நீ வழிபடும் திருவுருவமாகிய படத்தினை வரைந்து கொண்டு, பக்தி மேலீட்டினால், மனத்தினாலேயே, பலவகைப் பூசனைத் திரவியங்களையும் நிவேதித்து, உள்ளமாகிய மலர்கொண்டு அருச்சித்து, கண்ணீராகிய நீர் கொண்டு தீர்த்தம் ஆட்டி, வழிபடலாம். யான் இப்போது உனக்குக் கூறிய இவையே போதுமானவை இனி, அவற்றைச் செயலில் செய்து உன தகுதியைக் காட்டுதல் உன் கடன். காலத்தை அவமே போக்காதே. இன்றே—இன்னே—செய்குதி. காலையும் மாலையும் தவறுமல் செய்துவா இவ்வாறு இரண்டு வருடங்களுக்கேனும் தவறுமல் இதனைச் செய்து வருவையேல், பெரியதோர் இன்பம் உனக்கு உண்டாதலை நீ உணர்வாய். உணரவே, மேலும் நம்மை அடைந்து மிக உயர்ந்த—பரமஇரகசியமான — உண்மைகளையெல்லாம் நீ அறிவாய். இப்போதைக்கு இஃது அமையும். வேறு வேண்டா. எதிர்காலத்தில் நீ செய்யவேண்டிய சாதனைகள் இன்னின்ன என்பதை யாம் அவ்வப்போது குறிப்பிடுவோம் தற்போது மானசபூசை வேண்டும் என்று நீ கவலைகொள்ளாதே. இதுகாறும் நீ கேட்டவற்றைச் செயலிற் கொண்டு வருதற்கு முயற்சிப்பாய். தியானத்திற்கெனத் தனிமையும் தூய்மையும் வாய்ந்த ஓர் இடத்தை ஏற்படுத்திக்கொள். ஈராண்டுகட்கு இவ்வாறு செய்துவருவாயேல், ஏதாவதோர் ஆத்மீக அநுபவம் உனக்கு உண்டாகும். ஆதலால், இன்னே ஆரம்பி. சாதனை முதிர்ச்சி ஏற்பட, ஏற்பட, இன்னும் அதிகமாகத் தியானத்தில் ஆழ்ந்து செல்லுதற்கு உனக்கு ஆசை அதிகரிக்கும். தியானஞ் செய்யும்போது நிமிர்ந்திரு. கால்களை மடக்கி இருகைகள் மார்பிலேனும், மேல் வயிற்றின் பக்கத்திலேனும் இருக்குமாறு வைத்துக்கொள் அடிக்கடி பெரியோர்களைத் தரிசி. பரிசுத்தமான இடங்களுக்குச் செல். பரிசுத்தமான நூல்களைக் கல். இடையிடையே என்னிடமும் வா. ஆசனத்தில் அமர்ந்த உடனேயே தியானத்தை ஆரம்பியாதே. சிறிதுநேரம் அமைதியாக இரு. மனதில் வேற்றெண்ணங்கள் வந்து புகாமல் அதனை வெறுமனாக வைத்திரு. அதன் பின்னரே தியானத்தை ஆரம்பி. ஆரம்பத்தில், ஓராண்டு அல்லது ஈராண்டுகட்கு நீ மனதை வலித்து ஈர்த்து இதனைச் செய்ய

[தொடர்ச்சி 2-ம் பக்கம்]

திருத்தினை நகர். பண்—தக்கேசி.

வேந்த ராயுல காண்டறம் புரிந்து
வீற்றி ருந்தவிவ்வுடலிது தன்னைத்
தேர்ந்தி நந்துவேந் துயருழந் திடுமிப்
போக்க வாழ்வினை விட்டிடு நெஞ்சே
பாந்த ளங்கையி லாட்டுகந் தானைப்
பரம னைக்கடல் சூர்தடிந் திட்ட
சேந்தர் தாதையைத் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை
[மனனே.

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

### மலைப்பாம்பு மறைந்த மாயம்.

கொழும்பு, ஏப். 22.

சின்னட்களுக்குமுன்கோட்டையிலுள்ள கந்தோர் ஒன்றில் ஒரு கூட்டிற்குள் வைத்து வளர்க்கப்பட்ட மலைப்பாம்பொன்று எவர்க்கும் தெரியாமலே ஏதோ ஒருவிதமாக கூட்டைவிட்டுப் புறப்பட்டு விட்டது. அதனைக் கண்டுபிடித்தற்கு முயன்றும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. எங்கேனும் ஒருகூரையிலேயே அஃது இருத்தல்வேண்டுமென்று ஊகிக்கப்படுகிறது.

——

### சுவாமி விபுலானந்தா.

சர்வகலாசாலைக் கமிட்டி அங்கத்துவம்.

சென்னைச் சர்வகலாசாலையின் ஒரு கிளையாகிய கிழ்நாட்டுமொழிகளின் ஆராய்ச்சிப் பகுதிக்குத் தகுந்த ஆசிரியர்களைத் தெரிந்தெடுக்கும் அதிகாரம் ஓர் தெரிவுக் கமிட்டிக்கு விடப்பட்டிருக்கிறது. இக் கமிட்டியில் ஓர் அங்கத்தவராக அமருமாறு ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தா அவர்களும் வேண்டிக்கொள்ளப்பட்டிருக்கிறார். இக் கமிட்டியில் உள்ள ஏனைய அங்கத்தவர்கள் உப-சான்செலர், தமிழ் ஆராய்ச்சி நிர்வாகசபையின் தலைவர், மகாமகோபாத்தியாய டாக்டர் வி. சாமிநாதய்யர், ராவ் சாஹிப் வி. பி. சுப்பிரமணிய முதலியார், பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் என்னும் இவர்களாவர். இது சம்பந்தமாகச் சுவாமிகள் சென்னைக்குச் செல்கிறார். ஏப்பிரல் மாதக் கடைசியில் இவர் மீளவும் இலங்கைக்குத் திரும்புவாரென அறிகிறோம்.

——

### சுபாஷ் சந்திர போஸ்

எர்வாடா சிறையில் சகோதரர் சம்பாஷணை.

பூனா, 21.

தற்போது எர்வாடா ஜெயிலிலிருக்கும் திரு. சுபாஷ்சந்திரபோஸைக் கண்டுபேசுதற்கு அநுமதியளிக்குமாறு அவரதுசோதரராகிய திரு. ஷெயில் சந்திரபோஸ், இந்திய அரசாங்கத்தார்க்கும் பம்பாய் மாகாணத் தலைவருக்கும் விண்ணப்பஞ் செய்திருந்தார். அரசினர் அதற்கு அநுமதியளித்ததின்பேரில் இன்று பிற்பகல் திரு. ஷெயில் போஸ் சிறையில் சகோதரரைக் கண்டு பேசினார். சிறையதிகாரிகள் வேண்டுகோளுக்கிணைந்து சகோதரர் இருவரும் ஆங்கிலத்திலேயே சம்பாஷித்தனர். அதிகாரிகள் பக்கத்தில் நின்றுகொண்டே இருந்தனர். சுபாஷ் போஸ் நல்ல தேகாரோக்கியத்தோடு இருக்கிறதாகவும், ஆயின் உஷ்ணம் மாத்திரம் அதிகமாக இருந்ததாகவும் தெரிகிறது.

## தொல்காப்பிய ஆராய்ச்சி.

### சக்கரவர்த்தி இராஜ கோபாலாசாரியர் எழுதியது.

"எண்வகை மணம்; கோணலாராய்ச்சி; ஆரியர்-தமிழர் ஒற்றுமை; 'பண்டை நாகரிகம் வடக்கிலும் தெற்கிலும் ஒன்றே' "

(முற்றொடர்)

வியாஸ மகாபாரதத்தில் ஆதி பர்வத்தில் 109-வது அத்தியாயத்திலும், 242-வது அத்தியாயத்திலும் முறையே இரண்டு வெகு முக்கியமான சம்பவங்கள் நடக்கின்றன.

முதல் சம்பவம்:- பீஷ்மாச்சாரியர் காசிராஜனின் சுயம்வர மண்டபத்திற்குச் சென்று அந்த ராஜாவின் மூன்று கன்னிகைகளையும் பலாத்காரமாய்த் தூக்கித் தம் தேரில் வைத்துக்கொண்டு மேக கர்ஜனை போன்ற குரலில் அவ்விடம் இருந்த அரசர்களுக்கு எட்டுவிதமான விவாக முறைகளை பெடுத்துச் சொல்லி, அவைகளை - தூக்கத்திலும் மயக்கத்திலும் புணர்ந்து விடுதல், பலாத்காரமாக எடுத்துப்போதல், பெற்றோருக்குத் தெரியப்படுத்தாமல் மறைவாகப் புணர்ந்து முடித்தல், இவ்வகை மேன்மையான விவாக முறைகள் உள்பட — விவரித்துவிட்டு, 'ராக்ஷஸ விவாகம் என்ற பெயர் கொண்ட பலாத்கார முறையான எட்டாவது முறையே புத்திசாலிகளால் விரும்பப்பட்டதென்றறியுங்கள். ராஜபுத்திரர்கள் சுயம்வர முறையைச் சிலாகிக்கின்றனர். ஆனால் பலாத்காரமாகக் கொண்டு போவதே சிறந்தது. இந்தப் பெண்களை நான் பலாத்காரமாகக் கொண்டு போகக் கருதுகிறேன். நீங்கள் உங்கள் சக்தியளவு ஜயிக்கவோ, தோற்கவோ - யுத்தம் செய்யுங்கள். நான் போருக்குச் சந்நத்தமாயிருக்கிறேன்" என்றார். அரசர்கள் போர் செய்தார்கள். பீஷ்மர் ஜயித்தார் என்று சொல்லவேண்டியதில்லை. பிறகு நடந்த கதை வெகு ரஸமுபகமும் பொருந்தியது இது பீஷ்மருக்கு மரணமாகவே பின்னால் முடிந்தது. இங்கே அக்கதை அவசியமில்லை. இவ்வாறு பலாத்காரமாகக் கன்னிகைளைத் தூக்கிக்கொண்டு போய் விவாகம் செய்துகொள்ளும் முறையும் ஆரியன பழைய "நாகரீகம்" என்று வியாஸ பாரதத்திலிருந்து சிலர் ஆராய்ச்சி செய்து முடிக்கலாம்.

இரண்டாவது சம்பவம்:-253வது அத்தியாயத்தில், அருச்சுனன் மாறுவேஷம் பூண்டு ஏமாற்றிச் சுபத்திரையைத் தூக்கிக் கொண்டு போகிறான். அப்போது சுபத்திரைக்கு அர்ச்சுனன் தர்மோபதேசம் செய்கிறான். 'சுபத்திரையே! உனது மகைகள் சுற்றத்தாருடன் சிவபிரானுடைய மகோத்சவத்திற்காக வேறு தேசம் போயிருக்கிறார். விவாக முறைகளில் ஐந்தாவதான காந்தர்வ விவாகந்தான் சாஸ்திரத்திற்கு ஒத்தது. காந்தர்வ விவாகத்திற்கு கிரியைகள் வேண்டியதில்லை. அது காதலைக் கொண்டே ரகஸியமாக மந்திரமில்லாமல் செய்யப்படுவது. கிரியை இல்லாத விவாகத்தைத் தான் நீ செய்யவேண்டும். இன்றே நல்ல நாள்" என்று உயர்தர தர்மோபதேசம் அவசரமாகச் செய்கிறான். செய்து, அவள் சம்மதமும்பெற்று, மணம்முடித்துக் கொள்கிறான். இதுவும் ஆரிய 'நாகரீக' வழக்கங்களுக்கு ஆராய்ச்சிக்காரர் கையில் ஓர் உதாரணமாகலாம். எட்டுவகை மணமுறைகள் மனுஸ்மிருதியிலும் பாரதத்தை பொட்டியே கூறப்பட்டிருக்கின்றன.

நிற்க, வியாஸ பாரதத்திலும் மனுஸ்மிருதியிலும்போலவே தொல்காப்பியத்திலும் "மன்றல்" முறைகள் எட்டு சொல்லப்படுகின்றன. அந்நூல் எழுதிய காலத்திலேயே இம்மண முறைகளில் கூடாதென்று சில நீக்கப்பட்டுப் போயினவென்றும், பலராங்கச் சடங்கு முறைகள் விதிக்கப்பெற்றிருந்தன வென்றும் காணப்படுகிறது, தொல்காப்பியனுக்கே அவர் காலத்திற்கும் முந்தியே நிந்துபோன பழக்கங்களைக் குறித்து ஆராய்ச்சி செய்ய நேரிட்டது. ஆராய்ச்சி செய்து அடியில் கண்டவாறு தம் வாக்கத்தைச் சூத்திரங்களாக எழுதியிருக்கிறார்.

பொய்யும் வழுவுந் தோன்றிய [பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப.
மேலோர் மூவர்க்கும் புணர்த்த [கரணம்
கீழோர்க் காகிய காலமு முண்டே.

இப்போது தமிழ்ப் புலவர்களுக்குள் கோபத்திற்கும் விவகாரத்திற்கும் காரணம் இரண்டு தவறுன எண்ணங்கள் என்பது என் வணக்கமான விண்ணப்பம்.

"ஐயர்" என்றால் ஆரிய ஜாதித் தலைவர்கள் என்று தொல்காப்பியனார் சாக்ஷி கூறிவிட்டதாக ஸ்ரீ மு. இராகவையங்கார் வைத்துக்கொண்டது ஆதாரமற்றது. "ஐயர்" என்ற தமிழ் மொழி, 'ஆர்ய' என்ற ஸம்ஸ்கிருத மொழியின் திரிபு அல்ல என்று ஸ்ரீ சோமசுந்தர பாரதியார் எழுதுகிறார். அது எவ்வாறாயினும், "ஆர்ய" என்ற ஸம்ஸ்கிருத மொழிக்கு ஸம்ஸ்கிருத நூல்களில் எவ்விடத்திலும் ஒரு ஜாதியின் பெயராகப் பிரயோகம் காணப்படவில்லை; மேலோன், பெரியோன், குணவான் என்று பொருள்படுமாறு தான் வழங்கி வந்தது. இப்போது ஐரோப்பிய ஆராய்ச்சிக்காரர் "ஆரியன்" என்ற பதத்தைப் பிரயோகிக்கும் முறையில் அக்காலத்தில் எழுத்திலோ பேச்சிலோ அந்தப்

தொடர்ச்சி 2-ம் பக்கம்.

## விநோதக் கொத்து

### உண்மையறியும் புஷ்பம்.

கொள்ளை, திருட்டு முதலியவை களைப்பற்றி உண்மை விவரத்தை தெரிய வேண்டுமா? ஒரு சாதாரண புஷ்பத்தின் உதவியால் இதைக் கண்டு பிடித்துவிடலாம். இங்கிலாந்தில் பல சந்துகளிலும் கூட இப்புஷ்பங்கள் மண்டிக்கிடக்கின்றன. இப்புஷ்பத்திலிருந்து ஒருவகை திராவகம் செய்கிறார்கள். சந்தேகப்பட்ட பேர்வழிக்கு அத்திராவகத்தை மூக்கில் காட்டியதும், அவன் ஒருவித மயக்கத்தில் ஆழ்ந்துவிடுகிறானென்றும், அப்போது உள்ளது உள்ளவாறு வந்துவிடுமென்றும், பொய்யேதுவும் வாராதென்றும், பேசாமலிருக்க முடியாதென்றும், கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் உண்மையான பதில் அளிக்க வேண்டியிருக்குமென்றும், குற்ற ஆராய்ச்சி நிபுணரான ஸ்ரீ ரோட்ஸ் என்பவர் கூறுகிறார். அமெரிக்காவில், இந்தத் திராவகத்தைப் பொலிஸார் உபயோகித்து வருகிறார்கள். தவணையில் வைத்து விசாரிக்கையில் வகதிகளிடமிருந்து உண்மையை அறியப் படிப்படியாக மூன்றுவித முறைகளை அனுஷ்டிப்பதுண்டு. கடுமையான முறைக்கும் வாய்திறக்காமலிருந்த ஒரு கைதிக்கு இந்த திராவகத்தைக் கொடுத்ததும், தன சகாக்களைப் பற்றிய உண்மையை அவன் கூறிவிட்டான். துப்பாக்கிக்கும் அஞ்சாத ஆயிரக்கணக்கான குற்றவாளிகள் இத்திராவகத்தைக் கண்டு பயப்படுகிறார்கள்.

### காதல் மருந்து.

"கண்டதும் காதல்" என்னும்விஷயமாக அபிப்பிராய பேதங்கள் ஏற்படலாம். இது சம்பந்தமாக ஓர் கதை இருந்து வருகிறது. ஒரு இளவரசரும் அவரது தங்கையும் காட்டு மார்க்கமாகச் சென்று கொண்டிருந்தபோது, இளவரசி ஒரு எலுமிச்சம் பழத்தை அறுத்துக் கொடுக்கச் சொன்னாள். இளவரசன் தன வாளால் அறுத்துக் கொடுத்ததும், இளவரசி சாப்பிட்டாள். உடனே தன் அண்ணன் மீதே காதல் கொண்டாள். இந்த விபரீதத்திற்கு காரணத்தைப் பரிசீலனை செய்ததில் கத்தியில் ஓர் பச்சிலையின் மணம் வீசியது. அன்று காலையில் தான், இளவரசன் தன் வாளால் ஒரு பச்சிலையை அகஸ்மாத்தாக அறுத்தான். இது அப்பச்சிலையின் சேஷ்டை என்பது அப்போதுதான் தெரியவந்தது.

### நிர்வாண விவாகம்.

1933–ம் வருஷத்தில் கலிபோர்னியாவில், நிர்வாணிகள் காலனியில் ஓர் விவாகம் நடந்தது. ஸ்ரீ ஜேம்ஸ் எப். குட்மான் தம்பதிகளுக்கு, நிர்வாணிகள் விதிப்படி விவாகம் நடந்தது. மாப்பிள்ளை, மணப்பெண், புரோகிதர், விருந்தினர் முதலிய வரனைவரும் நிர்வாணமாகவே வந்திருந்தார்கள். இக் கல்யாணம் பத்திரிகைகளில்பிரமாதமாக்கப்பட்டது. மேற்கூறிய தம்பதிகள் 3½ வருஷ காலம் கழித்து, இப்போது லாஸ் ஆஞ்சலீஸ் கோர்ட்டில் விவாகரத்துச் செய்துகொண்டனர்.

---

### திருக்கோணமலை வேலை நிறுத்தம்

#### கூலிக்காரர் மீண்டு போகின்றனர்

சென்றவாரம், திருக்கோணமலையில் இராணுவப்பகுதிக் கட்டடங்களில் வேலைசெய்தவர்கள் தங்களுக்குக் கூலிப் பணம் போதாதென ஒருமித்து வேலையை நிறுத்திவிட்டனரென்பதை முந்திய பிரசுரத்தில் வெளியிட்டுள்ளோம். இவர்கள் வேலை நிறுத்தஞ் செய்யவே இவர்களுக்குப் பதிலாகக் கொச்சிநாட்டுக் கூலிச் சனங்கள் அங்கே போய்க் குறைந்த கூலிக்கு வேலை செய்யலாயினர். அந்த வேதனப்பெற்று வேலைசெய்ய உடன்பட்டுப் பழைய கூலிக்காரர் 1900 பேர் வரையில் வேலை பெறும் பொருட்டு மீண்டு போனபோது அவர்கள் 700 பேருக்கே வேலை கொடுக்கப்பட்டது. ஏனையோர் ஏமாந்தபடி தங்கள் வீடுகளுக்கு மீண்டனராம்.

## தொல்காப்பிய ஆராய்ச்சி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதம் வழங்கியது கிடையாது. ஆகையால் "ஆர்ய" என்ற வடமொழியின் திரிபாக "ஐய" என்ற தமிழ் மொழி உண்டானதென்று வைத்துக் கொண்டாலும், மேற்குறிக்கப்பட்ட பொதுப் பொருளில்தான் அம்மொழி வழங்கியிருக்கக் கூடுமே யொழிய ஒரு ஜாதிப் பெயராக வழங்கவில்லை. சுத்தத் தமிழ்மொழியாயினும் வடமொழித் திரிபாயினும், "ஐயர்" என்றால் பெரியோர் என்றுதான் பொருள். "தமிழரல்லாத" பெரியோர் என்று ஸ்ரீ இராகவையங்கார் அம்மொழியைப் பொருள்படுத்திக் கொள்வது பலாத்காரமான கோணலாராய்ச்சியாகும். ஆகையால் தொல்காப்பியத்தில்காண்பது:—"ஆரியின் எட்டுவகை மணமுறைகள் வழங்கிவந்தன; பொய்யும் வழுவும் தோன்றிய பின் பெரியோர் சடங்குகள் அமைத்தனர்" இவ்வளவே இதிலிருந்து ஆரிய ஜாதியாரில் மேலோர் வடக்கிலிருந்து தென்னாட்டுக்கு நல்ல மண முறைகள் கொண்டுவந்து கொடுத்தனர் என்று தொல்காப்பியனார் தம் இலக்கணச் சூத்திரத்தில் சொன்னதாக எவ்வாறு பொருள் கொள்ள முடியும்? இது ஸ்ரீ மு. இராகவையங்கார் ஆராய்ச்சியில் அஸ்திவாரத் தவறு.

### இரண்டாவது தவறு பண்டைக்காலத் தமிழர் யார்?

மேலோர் மூவர்க்கும் புணர்த்த [கரணம்
கீழோர்க்காகிய காலமுமுண்டே.

என்ற தொல்காப்பியச் சூத்திரத்திற்கு ஸ்ரீ. மு. இராகவையங்கார் எழுதும் உரை: "ஆரியராகிய அந்தணர், அரசர், வணிகர், மூவர்க்கும் இருடிகள் ஒரு காலத்தே விதித்துப் போந்த சடங்கோடு கூடிய கற்பு முறையைத் தம் புராதன முறையொன்றில் நின்றொழுகி வந்த தமிழ் நாட்டார்க்கும் ஐயர் விதிக்கும்படி நேர்ந்த காலமு முண்டென்று உய்த்துணரப்படும்."

இவ்வாறு, தமிழர், அனைவரையும் நான்காவது வருணத்திலேயே கணக்கிட்டு, தமிழ் நூல்களில் பலவிடங்களில் காணப்படும். முதல் மூன்று வருணத்தார், அதாவது 'அந்தணர்' 'அரசர்' 'வணிகர்' என்பவர்கள், "ஆரிய" ஜாதியார் என்றும், வேளிராகிய நான்காவது தமிழ் வகுப்பினர் மட்டுமே "தமிழர்" என்றும் ஸ்ரீ இராகவையங்கார் வைத்துக் கொண்டு தொல்காப்பியச் சூத்திரத்திற்குப் பொருள் தேடுகிறார். இது உண்மைக்கும், நாம் கண்ணால் காணும் பிரமாணங்களுக்கும் மாறாகும். இக்காலத்திலாவது தொல்காப்பியனார் காலத்திலாவது இவ்வாறு பகுப்பது தவறாகும். தமிழ் வேந்தரும் அவர்கள் குலத்தவரும் தமிழரல்லவா? தமிழ் வணிகர் தமிழரல்லாது மற்று யாவர்தான் அவரை விடத் தமிழராவார்?

இப்பிழை ஸ்ரீ இராகவையங்கார் மட்டும் செய்த பிழையல்ல. இதையொட்டிய ஒரு தவறான கொள்கை தமிழ் நாட்டில் பலரிடை பரவி வருகிறது: அவரவது தற்காலத்தில் தமிழ் நாட்டில் உள்ள அந்தணர் மட்டும் ஆரியரென்றும், மற்ற எல்லா ஜாதியாரும் திராவிடர் அல்லது தமிழர் என்றும் இந்தத் தவறான கொள்கையை ஸ்ரீ சோமசுந்தர பாரதியாரும் ஒழித்தாரில்லையென்று தோன்றுகிறது; அவர் சினத்திற்குக் காரணமே தமிழரில் அந்தணர் மட்டும் சுத்த ஆரியர் என்றும் மற்ற அனைவரும் சுத்தத் தமிழர் என்றும் மனத்தில் ஒரு பாகுபாடு செய்து கொண்டிருப்பதனால் தான் இல்லையேல் சினமிராது; ஆராய்ச்சித் தவறை மட்டில் காட்டிச் சிரித்திருப்பார்.

மற்றச் சோதனைகள் செய்யாமலே வெறும் படங்கள் பிடித்துப் பார்த்தாலுங்கூட, தென்னாட்டில் எல்லா வருணங்களிலும், எல்லாக் குடும்பங்களிலும், ஆராய்ச்சிக்காரர் சொல்லும் "ஆரிய"மும் "தமிழு"ம் கலந்து கிடப்பது தெரியும்.

தொல்காப்பியர் காலத்திலும் அவ்வாசிரியர் ஆராய்ந்த பண்டைக்காலத்திலும் நான்கு வருணப் பாகுபாடு ஆரியரைப் போலவே தமிழராலும் தழுவப்பட்டு வந்தது. "மேலோர் மூவர்க்கும்" என்று தொல்காப்பியர் சூத்திரத்தில் சொல்லியிருப்பது தமிழரான அந்தணர், வேந்தர், வணிகர். "கீழோர்" என்றது தமிழரில் நான்காவது வருணத்தார். இவ்வாறு இயல்பாகப் பொருள் கொள்ளாமல் "மேலோர்" என்ற தொல்காப்பியத்தில் காண்பது ஆரிய துவிஜர் என்றும், "கீழோர்" என்பது தமிழர்களனைவரையும் குறிக்கும் என்றும் ஸ்ரீ இராகவையங்கார் கொள்வது முற்றிலும் தவறாகும். இது தவறு என்று ஒப்புக்கொண்டால் ஸ்ரீ இராகவையங்காரின் ஆராய்ச்சியும் ஸ்ரீ பாரதியாரின் கோபமும் இரண்டும்கரைந்துபோகும்.

### ஒரே நாகரிகம்

தமிழ் நாட்டில் வசித்து வந்த ஜனங்களை அந்தணர், அரசர், வணிகர், வேளிர் என்று பிரித்து அழைத்தாலும் சரி, தமிழர் என்ற பொதுப்படையாகப் பெயரிட்டாலும் சரி, அனைவரும் கலந்து இயற்றிய நாகரிகமே தமிழ் நாகரிகம். தமிழரில் அந்தணருடைய நாகரிகமும், கல்வி, கேள்வி வழக்கங்களும் வேறு, மற்றவர்களுடைய நாகரிகம், கல்வி கேள்விகள் வேறு, என்று நினைப்பது பெருந் தீமை விளைக்கும் முறை, உண்மைக்கு விரோதம்.

### வழக்கொற்றுமை

வடக்கே எந்த வருணத்தைச் சேர்ந்தவர்களும் மாமன் மகளை மணம் செய்யும் வழக்கமில்லை. அது விலக்கு விதிகளுக்குள் ஒன்றாகும். இது ஸ்மிருதிகளுக்கு இசைந்த விலக்கு. தென்னாட்டிலோ அந்தணர், க்ஷத்திரியர், வணிகர், வேளாளர் எல்லா வருணத்தாரிலும் சர்வ சாதாரணமாக ஆதிகாலந்தொட்டு மாமன் அத்தை மார்களின் மக்கள் மணம்புரிந்துகொள்வது வழக்கம். "தாலி" கட்டும் வழக்கமும் வடநாட்டிலில்லை. தென்னாட்டில் அந்தணர்கள் உள்பட எல்லா வருணத்தாரிலும் இது விவாகச் சடங்குகளில் பிரதானமாக வழங்கி வருவது அனைவரும் அறிவார்.

### தெய்வ வழிபாட்டில் ஒற்றுமை.

மாயோன், சிவன், இந்திரன், குமரன், வருணன் முதலிய தெய்வங்களை அனைவரும் வணங்கி வந்ததை மிகப்பழைய நூல்களிலும்—தொல்காப்பியத்திலும் — காண்கிறோம். ஆரிய வேதத்தில் சொல்லப்பட்ட தெய்வங்களை நீக்கித் தமிழர் வேறு எந்தத் தெய்வங்களை வணங்கினார்கள் என்று சாதிக்க முடியும்? தமிழரின் தெய்வங்கள் வேறாகவும் ஆரியரின் தெய்வங்கள் வேறாகவும் யாரும் இதுவரையில் காட்டவில்லை. இதற்குமேல் என்ன சண்டை? மதத்திற்கு மேல் என்ன நாகரிகம்? தமிழரின் தெய்வங்களை ஆரியர் கொள்ளைகொண்டு விட்டதாகவுமிருக்கலாம். அப்படியாயினும் முடிவு ஒன்றே யல்லவோ? யார் முதலில் கண்டதாயினும் நாகரிகம் இவருக்கும் ஒன்றே யென்பது என் உறுதி.

### அநாகரிகங்களிலும் ஒன்றே

நாகரிகம் மட்டுமல்ல, அநாகரிகமும் ஒன்றேயாகப்பரவி நிற்கிறது. ஆரிய வழக்கங்களில் மிகக்கொடிய தீண்டாமை, அதாவது சில ஜாதியாரின் ஜன்மமே தீட்டு என்றும் அவர்கள் தொட்ட தண்ணீர், உணவு, துணி எதுவும் மற்றவர்கள் தீண்டத்தகாது என்றும் வழங்கு வது, வடக்கேயும் உக்கிரமாய் நடைபெறுகிறது; தென்னாட்டிலும் எல்லா வகுப்பாருள்ளும் உக்கிரமாய் நடைபெற்று வருகிறது. ஆராய்ச்சிக்கு எட்டின காலம் வரையில் இரண்டு நாட்டிலும் இந்தக் கோரவழக்கம் இருந்து வந்ததாகத் தெரிகிறது. இதில் ஏன் தமிழ் நாகரிகமும் ஆரிய நாகரிகமும் வேறுபடவில்லை? கோபித்துப் பேசியவாறு நடைபெறுகிறது. எந்தத் தொழில் வடக்கே தாழ்வோ அதே தொழில் தெற்கேயும் தாழ்வு. இந்தத் தீண்டாமையையும், தொழில் இகழ்ச்சி, மேன்மைகளையும் யாரிடம் யார் கற்றுக் கொண்டார்கள்? தீண்டாமை வழக்கத்தை கற்பித்தது தாழ்வா? கற்றது தாழ்வா? பண்டைத் தமிழ் வேந்தர்களை எந்த ஆரிய வேந்தர் அடக்கி ஆண்டார்கள்? இல்லாவிடில் ஏன் பெரிய ஜனசமூகம் ஒன்றைத் தீண்டாதாராகப் புதிதாக விதித்துவிட அவ்வேந்தர்கள் சம்மதித்தார்கள்? அவர்களும் அப்படி நடத்தப்பட ஏன் ஆட்சேபிக்கவில்லை? இவைகளை எல்லாம சரிவர ஆராய்ந்தால் பாரத தேசத்தின் பண்டை நாகரிகம் வடக்கிலும் தெற்கிலும், ஆரியம் தமிழ் என்ற பேதமின்றி, முதலிலிருந்து ஒன்றாய்ப் பிறந்து வளர்ந்ததென்று உள்ளங்கை நெல்லிக்கனி போல் காணலாம்.

### முடிவு

எந்த நூல் எடுத்தாலும் "தருமார்த்த காம மோக்ஷம்" "அறம் பொருளின்பம் வீடு" எந்த பழைய ஒழுக்க நூல் எடுத்தாலும் "சாதுர் வர்ணம்"—"அந்தண ரரசர் வணிகர் வேளிர்," மேலோர்—கீழோர்", "நால்வர்", இவ்வகைப் பாகுபாடு ஆரிய சமுதாய தத்துவமும், வேறாகவிருந்த காலத்தை எந்த நூலிலும் எந்த ஆராய்ச்சியிலும் காணமுடியாது. கல்வி, கேள்வி, தெய்வம், ஒழுக்கம், வழக்கம் அனைத்திலும் தமிழும் ஆரியமும் ஒன்றே.

ஆமாம். பாஷை மட்டில் வேறு சந்தேகமில்லை. ஆனால் அப்பாஷைகள் பேச்சோடிருந்த காலம் போய் எழுத்தும், எவ்விதக் கல்வி கேள்விகளும காண்பதற்கு முந்திபே இரண்டு நாகரிகமும் ஒன்றாயுண்டாகி ஒன்றாய் வளர்ந்தனவென்பதில் எனக்குச் சந்தேகமில்லை. மற்றவர்களும் இதற்கு மாறாக எவ்விதத் தகுந்த பிரமாணமும் காட்டமுடியாது. இனி, மரம் வளர்ந்த நிழலும் கனிகளும் தந்தபின் வேர்களைப் பிடுங்கி ஆராய்ச்சி செய்யலாம்.

## குருவும் சிஷ்யனும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியவை ஆவாய். அப்பால் அதுவே உனக்குச் சிரமமின்றி இயல்பாகவே அமைந்துவிடும். எப்போதேனும், உனக்கு வேலை அதிகப்படின், அன்று ஒருமுறை மாத்திரம் தியானம் செய். அக்காலில் தியானஞ் செய்யும் நேரத்தையும் குறைத்துக்கொள். சிரமம் அதிகமாக உள்ள நாட்களில், பத்து அல்லது பதினைந்து நிமிஷங்கட்குத் தியானத்தில் அமருதி. எதிர்பாராத பெரிய வசதியீனங்கள் ஏதாவது ஏற்படின், ஒரு கணப்பொழுதாயினும் இறைவனை மனதார நினைத்து வணங்குதி. இன்றியமையாத சில நாட்களில் மாத்திரமே இவ்வாறு செய்வதன்றி எப்போதும் செய்யாதே.

காலையில், தியானத்துக்கு அமருமுன், கைகால் முகங்களைச் சுத்தி செய்து, தூய ஆடை தரித்து, தூய நீர் சிறிது எடுத்துக்கொண்டு தியானத்துக்கு ஏகுதி. மாலையிலும் அவ்வாறே செய்குதி. மீண்டும் நான் இதனை உனக்கு வற்புறுத்துகின்றேன். இதன்வழி தவறாமல் ஒழுகி வருவாயேல், நிறைந்த மனச்சாந்தியும், இன்பவாழ்வும், உனக்கு உண்டாகும். சிறப்பாக இரண்டு ஒழுக்கங்களை நீ கைக்கொண்டு ஒழுகு. ஒன்று எதுவரினும் எப்போதும் உண்மையைப்பேசு. மற்றது உலகில் உள்ள மாதரை அன்னையர் என்று கருதி விநயத்தோடு நடந்து வா. இப்போதைக்கு இவை இரண்டும் அமையும். இவை இரண்டையும் நீ கைக்கொண்டு ஒழுகுவாயேல், மற்றவை தாமே வந்து சேரும். கடவுள் இருக்கிறார் என்பதில் நம்பிக்கை வை. கடவுள் இல்லை என்று மறந்தும் கூறுதே. மகனே! கடவுள் இருக்கிறார் என்பதை நான் உறுதியாக உனக்குக் கூறுவேன். ஆதலால், கடவுளை உண்மைப் பக்தியோடு—உருகிய நெஞ்சத்தோடு—மிக்க தாழ்மையோடு—பிரார்த்தி. பிரார்த்தி. இன்னும் காலதாமதஞ் செய்யாதே. இனியும் சோம்பலுறாதே. இப்பொழுதே ஆரம்பி. இன்றே முன்னேறு. எஞ்சியவற்றை நான்பார்த்துக்கொள்வேன்

## ஊர் நெல்.

சிதம்பரம் புண்ணியநாச்சி மட தருமத்திற்குரிய திறமான மறவன்புலவு ஊர் நெல் எம்மிடம் விலைக்கு இருக்கிறது. வாங்கவிரும்புவோர் கடித மூலமாகவும் நேரிலும் எம்மிடம் விபரமறிந்து ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

மனேஜர்,
இந்துசாதனம்,
வண்ணார்பண்ணை.

---

## சர்வதேசசங்கமும் எத்தியோப்பியாவும்.

இந்நாட்களில் வரும் யுத்தச் செய்திகள் மிகுந்த அயரைத் தரக்கூடியனவாகவிருக்கின்றன. தானு ஏரிக்கரையில் இத்தாலியக் கொடி பறக்கின்றதாம்; அங்குள்ள மலைச் சிகரம் ஒன்றுக்கு "முஸோலினிச் சிகரம்" எனப் பெயரும் இடப்பட்டுள்ளதாம. 1925-ம் வருட உடன்படிக்கைக்கு விரோதமாக விஷக் காற்றினை உபயோகிக்கின்றார்களாம். இதுவரை அபிசீனியச் சக்கரவர்த்தியின் இராணுவ ஸ்தானமாகவிருந்த டென்ஸி நகரம்; சென்ற 15உ இத்தாலியப்படை அங்குப் புகுந்துவிட்டது; மன்னர் மாளிகைமீது இத்தாலியக் கொடி பறக்கின்றது. இந்நகரம் அபிசீனியாவின் தலைநகரான அடிஸ் அபாபாவுக்கு 160 மைல் தூரத்திற்குள் உள்ளது; டெஸ்ஸி பகைவரால் கைப்பற்றப்பட்டுவிட்டதென்றும், இன்னுஞ் சில நாட்களில் அடிஸ் அபாபாவும் அக்கதியடைதல் கூடுமென்றும் இத்தாலிய வேவுகாரர் கூறுகின்றனர்.

என்னே எத்தியோப்பியரின் நிலை; சர்வதேசசங்கம் என்ன செய்கின்றது; அபிசீனியாவுட் சிறிது தூரம் புகுந்தபொழுதே சர்வதேசசங்கத்தை மதியாதிருந்த இத்தாலி வெற்றியடைகிற சமயத்தில் மதிக்குமா? இத்தாலியரின் செயல் நீதியானதா?

சர்வதேசசங்கத்தில் சமாதானப் பிரச்சினைகள் சென்ற 15-ம் திகதி ஆரம்பமாயின முடிவோ ஏற்படவில்லை.

தாம் வெற்றிபெற்றதாக உடன்பட்டால் போர் நிறுத்தல் கூடும் என இத்தாலியர் அபிப்பிராயப்பட்டனர். அதற்கு அபிசீனியர் சம்மதிக்கவில்லை. இதற்கிடையில் அசாங்கி ஏரிக்கரையில் அபிசீனியர்க்குவெற்றி கிடைத்ததாகச் செய்தி வெட்டியுள்ளது. "வடக்குப் போர்முனையிலே அஷாங்கி ஏரியின் தென்மேற்கே சக்கரவர்த்தி ஹெயிலி செலாஸி மிகச் சிறந்த 2000 படைகளுடன் இத்தாலியரை எதிர்த்து வெற்றி பெற்றார். 2000 இரீட்ரியர்களும், 400 இத்தாலியர்களும் கொல்லப்பட்டனர்."

எவ்வளவு வீரராயினும் விமான வெடி குண்டுகளையும் விஷக்காற்று வெடிகுண்டுகளையும் தாக்கஇயலுமா? சமாதானம் ஏற்படுத்தஸ்தாபனமான சங்கம் என்ன செய்கின்றது?

---

## தேகவியோகம்.

உரும்பராயைச் ஜெனனபூமாகக் கொண்டவரும் வியாபார முயற்சி செய்தவருமாகிய ஸ்ரீ கயிலாயர் தம்பையா அவர்கள் சென்ற சனிக்கிழமை (25-4-36) தமது 80-ம் வயசில் இவ்வுலகவாழ்வை நீத்தனர். மலாய் நாட்டில் உத்தியோகம் வகித்து இப்போது உபகாரவேதனம் பெறும் ஸ்ரீ தம்பாபிள்ளை, மலாய் நாட்டில் உத்தியோகம் வகித்திருக்கும் ஸ்ரீ தயபிரகாசா, மட்டக்களப்பில் ஆசிரியராக விருக்கும் ஸ்ரீ மா. பீதாம்பரமவர்களின் மனைவியாகிய ஸ்ரீமதி நாகரத்தினம்மாள், ஸ்ரீ ஆறுமுக உபாத்தியாயரவர்களின் மனைவி ஸ்ரீமதி தங்கரத்தினம்மாள் கொப்பித்தோட்டத்தில் டிஸ்பென்சராயிருக்கும் ஸ்ரீ மதியாபரணம் அவர்களின் மனைவி ஸ்ரீமதி பாக்கியரத்தினம்மாள், மலாய் நாட்டில் அரசாங்க வைத்தியசாலையில் வேலையாயிருக்கும் ஸ்ரீ துரையப்பா அவர்களின் மனைவி ஸ்ரீமதி பவளரத்தினம்மாள் ஆகிய இவர்கள் மேற்படி தம்பையா அவர்களின் பிள்ளைகளாவர்.

# ஜவஹர்லால் வீரமுழக்கம்.

## 'தயவு தாக்ஷண்யமின்றி எதிர்க்க வேண்டும்'

### லக்ஷ்மணபுரிக் காங்கிரஸில் தலைமைப்பேருரை.

[முற்றுடர்]

புரட்சி இயக்கம்.

என்ற பயத்தைக் கிளப்பி விட்டு, அரசியல் இயக்கத்தை யடக்கி, வங்க மாகாணத்தை யொடுக்கச் சர்க்கார் செய்யும் முயற்சிகள் அடுத்தபடியாக ஞாபகத்திற்கு வருகின்றன. இப்பொழுது வங்க மாகாணத்திலாவது இந்தியாவின் வேறெந்தப் பாகத்திலாவது பயங்கர இயக்கம் இல்லை. பயங்கர இயக்கம் ஒரு நாட்டாரின் அரசியற் பக்குவ மின்மையைக் காட்டும். ஜன நாயகத்துவமில்லாத அரசியலமைப்பு அரசியல் ஞானமின் கெட்டதைக் காட்டும். நமது தேசிய இயக்கம் பக்குவ மில்லாத நிலைமையைக் கடந்து விட்டது. முன்பு பயங்கர இயக்கத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கூட அதை விட்டுவிட்டார்கள். காங்கிரஸ் அமைதியான பயன் படத்தக்க நடவடிக்கையையே வற்புறுத்தி வாலிபர்களின் மனதைக் கவர்ந்து விட்டது. சர்க்கார் நடை முறையினால் தான் புரட்சி இயக்கம் வளருகிறது. இல்லையெனில் புரட்சி இயக்கம் வேரறப் போயிருக்கும். பயங்கர இயக்கம் இருந்தாலுஞ்சரி, இல்லா விட்டாலுஞ்சரி, மிதுனபுரியிலும் வங்காளத்தின் மற்றப் பாகங்களிலும் சில காலமாக சர்க்கார் நடத்தும் காரியங்கள் பிறர் கண்டித்துத் தெரிய வேண்டியவையல்ல. பயங்கர இயக்கமில்லாத எல்லைப் புறத்திலும் இத்தகைய முறைகள் கையாளப் படுகின்றன. லட்சக்கணக்கான எல்லைப்புற வாசிகளின் அன்புக்குப் பாத்திரமான உத்தமர், அப்துல் கபார்கான் இன்னும் சிறையிலிருக்கிறார். சர்க்கார் வேறுவேறு காரணங்களைச் சொல்லலாம். ஆனால் நம்மை ஆளுவோரின் பாஸிஸ்டு மனப்பான்மையே சர்க்கார் நடை முறைக்கு அடிப்படையான காரணம்.

நம்முடைய நிலைமை.

இன்று எவ்வாறு இருந்து வருகிறது? இந்நாட்டில் சிறு சண்டைகளும் சச்சரவுகளும் தோன்றியிருக்கின்றன. இவற்றால் முக்கியமான காரியங்கள் தடைப்படுகின்றன. பெரிய லக்ஷியங்களை விட்டுச் சிறு காரியங்களில் நாம் சண்டையிட்டுக் கொள்கிறோம்.

பொது மக்களுடன் முன்பு நமக்கிருந்த தொடர்பு இப்போதில்லை. ஆகவே அத் தொடர்பின் மூலம் வரும் ஜீவசக்தி நின்று போய் விட்டது. நம் இயக்கமும் சக்தியை இழந்து விடுகிறது. முக்கிய விஷயங்களை விட்டு அமுக்கிய விஷயங்களில் கவனத்தைச் செலுத்துவது தான் ஆபத்தாக விருக்கிறது.

ஒவ்வோ ரியக்கத்திலும் முன்பு தளர்ச்சியும், வெற்றியும் தோல்வியும் உண்டு.

விவசாயிகள்.

தோற்கும் போது தேசிய சக்தி மறுபடி ஊட்ட வேண்டும். இதற்கு முன்பு நேரடியான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்ட போதெல்லாம் பொதுமக்களுடனும் முக்கியமாக விவசாயிகளுடனும் தொடர்பு இருந்து வந்தது. விவசாயிகளே நமது முதுகெலும்பு; மத்திய தர வகுப்பார் தலைவர்களாயிருந்து வந்தனர். நம் மக்களை மூன்று தரங்களாகப் பிரிக்கலாம். முதலாவது உயர்தரம்; இத்தரத்தவர் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய வாதத்தின் நண்பர்கள் கீழ்த்தரத்தோர் சர்வமும் இழந்தவர்கள். இவ் வகுப்பிலிருந்து தான் அரசியல் ஊழியர்கள் தோன்றுவர்; இவ் விரு தரத்திற்கும் நடுவே ஒரு மத்தியதரக் கூட்டத்தார் மேல்தரத்தாருடனும் கீழ் தரத்தாருடனும் இவர்களுக்குத் தொடர்பு உண்டு மேல் தரத்தாருடன் சம அந்தஸ்து கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இவர்களுக்கு உண்டு. ஆகவே மத்திய தர வகுப்புத் தலைவர்கள் இரு பக்கமும் நோக்க முள்ளவர்கள். நெருக்கடியான சமயங்களில் இவர்களால் முன்னேற்றம் தடைப்பட்டு திக்கு ஏற்படும். உலகப் பற்று மிகுதியுள்ள அவர்களுக்குத் தங்கள் உடைமைகள் போய் விடுமோ வென்ற கிலி. அவர்கள் தாட்டியதை எளிதில் தளர்த்தி விடலாம்.

தப்படியிருக்கும் இந்தியாவில் தலைவர்களாக இருந்தவர்க ளெல்லாம் இவ் வகுப்பிலிருந்து வந்தவர்களே யாவர். முன்னணியிலிருக்கும் தலைவர்கள் அப்புறப் படுத்தப் படுகிறார்கள். அவர்கள் ஸ்தானத்தை ஏற்கும் எளியோர் சலிப்படையாது விடுகின்றனர். சமீபத்தில் நடந்த போராட்டத்தில் சர்க்காரின் தீவிர நடை முறையால் பணம் படைத்த வகுப்பார் கஷ்டத்திற்குள் ஆனார்கள். போராட்டத்தை நிறுத்தும்படி அவர்களே செய்து விட்டனர்.

பொது மக்களின் ஆதரவைப் பிறக்கம் கொண்டு மத்தியதர வகுப்பார் தலைமைவகித்துக் காரியங்களைச் செய்தல் வேண்டும். காங்கிரஸ் பொது மக்களுக்காக உழைக்கும் ஸ்தாபனமாக மாத்திர மிருந்தால் போதாது. அவர்களது ஸ்தாபனமாகவே இருக்க வேண்டும். பொது மக்களிடமிருந்து பிரிந்தும் சீர்கெட்டும் மத்திய தர வகுப்பார் இருப்பதே நம் பலஹீனத்திற்குக் காரணம். நம் நடைமுறை இவர்களை உத்தேசித்தே பெரும்பாலும் வகுக்கப்படுகிறது. வகுப்புப் பிரச்சினை இவர்களைச் சம்பந்தித்ததுதான்; சாதாரண பொதுமக்களைச் சம்பந்தித்த தல்ல.

சென்ற பதினைந்து வருஷ காலமாகச் சாதாரணப் பொதுமக்களின் அவசரப் பொருளாதார பிரச்சினைகளை நாம் கவனியாது இருந்துவிட்டோம். காங்கிரசும் அவர்கள் குறைகளைப் போதிய அளவு வெளியிலெடுத்துக் கூறவில்லை. 1920ம் வருஷம் நிலைமை இப்படியிருக்கவில்லை. சாதாரணப் பொது மக்களின் குறைகளைப் பொதுப்படவாயினும் அப்போது காங்கிரஸ் கவனித்து வந்தது. காங்கிரசுக்கும் அவர்களுக்கும் தொடர்பிருந்தது. அவர்களது குறைகள் ஸ்வரூபத்தை யடைந்ததுடன் அவற்றைக் காங்கிரஸிலுள்ள பற்றவர்கள் வரவேற்கவில்லை. ஆகவே தொடர்பு நீங்கி விட்டது. இப்பொழுது அதற்காக வருந்தாமல் காங்கிரசுக்குள் பொது மக்கள் உணர்ச்சி பெருகிக் காங்கிரசுக்கும் பொது மக்களுக்கும் புதுத் தொடர்புண்டாகும் வழியை நாம் தேடிப் பிடிக்க வேண்டும். காங்கிரஸைப் பலனுறப் பிணைக்க ஏற்பாடு எதுவும் செய்ய வில்லை.

நாம் செய்ய வேண்டிய காரியம்.

நமது சுதந்திரப் போராட்டத்தில் ஏகாதிபத்திய ஆசை முறை எதிர்ப்பவர்களை எல்லாம் எப்படிச் சேர்க்கலாம்? நடுத்தர வகுப்பினரில் பெரும்பான்மையோர் சுயேச்சையை விரும்புகின்றனர். அவர்களையும் சாமான்ய பாமர ஜனங்களையும் ஒருங்கு சேர்த்து எப்படி எதிர்ப்பைப் பலப்படுத்தலாம்? என்பனவே நாம் தீர்க்க வேண்டிய உண்மையான பிரச்சினைகளாகும். ஒருங்கு சேர்ந்து எதிர்ப்பது பற்றிய பேச்சுச் சிறிது இருந்து வருகிறது. இது உயர் வகுப்பினருடன் செய்து கொள்ளும் உடன் படிக்கைக் குறிக்கிறதெனவும் தெரிகிறது. இதனால் சாமான்ய ஜனங்களுக்கு நஷ்டமேற்படலாம் நிச்சயம் அவ்வாறு செய்வது ஒரு நாளும் காங்கிரஸின் நோக்கமாக இருக்க முடியாது. இம் மாதிரியான உடன்பாட்டைச் செய்வதை காங்கிரஸ் ஆதரித்தால் இது தான் எவருக்காகப் பிரதிநிதியாக நின்று பாடுபட்டு வருவதாகச் சொல்லி வந்ததோ அவருடைய நலத்தைக் காட்டிக் கொடுத்து விட்டதற்கு ஒப்பாகும். பின் காங்கிரஸ் இருந்து வருவதற்கு நியாயமே இல்லாமல் போகும் ஏகாதிபத்திய ஆசை முறையைச் சற்றும் சலியாமல் எதிர்ப்பதே ஜனங்களது கூட்டு எதிர்ப்பின் முக்கியாம்சமாக இருக்க வேண்டும். இந்த எதிர்ப்புக்கான பலம் தொழிலாளரும் கிருஷிகர்களும் காங்கிரஸில் தீவிரமாகக் கலந்து கொண்டால் தான் உண்டாகும்.

உலகிலுள்ள போராடும் சக்திகள்.

நான் உங்களுக்கு முக்கியமான தாகப்படும் பிரச்சினைகளைப் பற்றிப் பிரஸ்தாபிக்காமல், உலக தேசியப் பிரச்சினைகளைப் பற்றி விரிவாகப் பிரஸ்தாபித்து வந்திருக்கும் முறையைப் பற்றி நீங்கள் ஆச்சரியப்பட்டிருக்கலாம். நீங்கள் பொறுமையை இழக்கக்கூடிய ஸ்திதிக்கும் வந்திருக்கலாம். ஆனால் உலக நிலையில் நமது பிரச்சினைகள் எந்த ஸ்திதியிலிருக்கின்றன என்று பார்ப்பதே சரியான முறையாகுமென நான் நம்புகிறேன். உலகில் நடைபெறும் சம்பவங்கள் ஒன்றுக் கொன்று நெருங்கிய சம்பந்தமுடையவையாகும். உலகில் முதலாளி வர்க்கத்தினாலும் ஏகாதிபத்திய ஆசை முறை கொண்டவர்களாலும் ஏற்படும் பிரச்சினைகளில் தம் நாட்டுப் பிரச்சினைகள் ஒரு பகுதியேயாகும். ஒவ்வொரு சம்பவத்தையும் மற்றவற்றுடன் சேர்க்காமலும் அதற்கும் மற்றவற்றிற்கும் உள்ள சம்பந்தங்களை அறிந்து கொள்ளாமலும் தனித்தனியாகக் கவனிப்பது நம்மைத் தவறான அபிப்பிராயம் கொள்ளச் செய்யும்.

உலகின் சகல திக்குகளிலும் ஏற்பட்டுள்ள பெரும்மாறுதல்களைக் கவனியுங்கள். பெரும சக்திகள் ஒன்றோடொன்று போராடுகின்றன. கொடிய யுத்தம் ஏற்படும் போலக் காணப் படுகின்றன.

அடிமைப்பட்ட நாட்டினர் சுதந்திரமடையப் போராடுகின்றனர். ஏகாதிபத்திய ஆசை கொண்டவர்கள் அவர்களை நசுக்கி வருகின்றனர். பிறரை ஏமாற்றி வேலை வாங்கிப் பிழைக்கிறவர்களை அம்மாதிரி செய்யப்படுவோர் எதிர்த்துச் சுதந்திரமும் சமத்துவமுமடைய முயலுகிறார்கள். ஏகாதிபத்திய ஆசை கொண்ட இத்தாலியர் திமுறுள்ள எதியோப்பியர்மீது வெடிகுண்டுகளை யெறிந்து அவர்களைக் கொல்லுகின்றனர். ஏகாதிபத்திய ஆசையுடைய ஜப்பானியர் வடசீனாவிலும் மங்கோலியாவிலும் தங்களது ஆக்ரமிப்பு வேலையை விடாமல் நடத்தி வருகின்றனர். ஏகாதிபத்திய ஆசையுள்ள பிரிட்டிஷார் இதர தேசங்கள் ஒழுங்கு தவறி நடப்பதை ஆட்சேபிக்கின்றனர். ஆனால் அவர்கள் இந்தியாவிலும் எல்லைப் புறத்திலும் ஏறக்குறைய அதே ஆட்சேபகரமான முறையைப் பின்பற்றி வருகிறார்கள்.

இப் போராட்டங்களுக்கெல்லாம் ஆதி காரணம் க்ஷீணித்து வரும் பொருளாதார ஏற்பாடேயாகும் இந்தப் பலவிதமான பிரச்சினைகளுக்கும் ஒரு இயற்கையான சம்பந்தம் இருப்பதை நாம் கண்டுகொள்ள முடியாதா? நாம் நடைமுதல் சம்பவங்களைச் சரியாக உணருவதற்காக இந்தச் சரித்திர ஞானத்தைப் பெருக்கிக் கொள்ள முடல்வோமாக இவ்வாறு செய்தால்தான் நாம் உலகப் போக்கை உணர்ந்து அதற்குத் தக்கபடி நடக்க முடியும்.

நான் இப் பிரசங்கத்தில் காங்கிரஸ் அக்கிராசனர்களின் சம்பிரதாயமான வழிக்குச் சற்று அப்பாலும் செல்லுவதாக உணருகின்றேன். ஆனால் எனினைப் பாசாங்குகளுமில்லை உங்களுடனிருக்கும்படி நீங்கள் செய்ய வேண்டுமென நான் விரும்பவில்லை. நாம் ஒருவருக்கொருவர் முற்றிலும் வெளிப்படையான மனதுடன் நடந்து கொள்ள வேண்டும். சமூக பொருளாதார விஷயங்களைப் பற்றி நான் கொண்டுள்ள அபிப்பிராயங்களை அடிக்கடி எடுத்துரைத்திருப்பதால் உங்களில் பலருக்கு அவை தெரிந்திருக்கும். இப்படி யிருப்பினும் என்னை அக்கிராசனராகத் தெரிந்தெடுத்ததனால் அந்த அபிப்பிராயங்கள் இந்தியாவில் பரவி வருகிறதென்றும், உங்களில் பெரும்பாலோர் அவற்றைச் சிந்தித்துப் பார்ப்பதில் தயை காட்டுவீர்களென்றும் நான் கருதுகிறேன்.

அபேதவாத முறையே பரிகாரம்.

உலகப் பிரச்சினைகளுக்கும் இந்தியப் பிரச்சினைகளுக்கும் அபேதவாத முறையே பரிகாரமளிக்கவல்லதென்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

நான் விளக்கமற்ற ஜீவகாருண்ய முறையைக் குறிக்க இப் பதத்தை உபயோகிக்கவில்லை. ஆனால் சாஸ்திரியமான, பொருளாதார முறையிலேயே இப்பதத்தை உபயோகிக்கிறேன். அபேதவாத முறை வெறும் பொருளாதார தத்துவமல்ல. அது வாழ்க்கைத் தத்துவமாகும். அதனால் அது எனது மனதிற்குப் பிடித்ததாயிருக்கிறது.

இந்தியாது வறுமை வேலையில்லாத் திண்டாட்டம், கேவலஸ்திதி, அடிமைத் தனம் இவற்றை யொழிப்பதற்கு அபேதவாத முறையைத் தவிர வேறுவழி எதுவும் எனக்குப் புலப்படவில்லை. அபேதவாத முறையை மேற்கொள்ளுவதனால் நமது ராஜீய சமூக அமைப்புகளை அடியோடே மாற்ற வேண்டி யிருக்கும் நிலம் கைத்தொழில் இவை சம்பந்தமாக ஸ்திரமான சொத்து சுதந்திரமுள்ள முறையை ஒழிக்க வேண்டியிருக்கும். ஏதேச்சாதிகாரம் வாய்ந்ததாயும் மான்ய முறையிலுள்ளதாயுமுள்ள இந்திய சமஸ்தானங்களை எடுக்க வேண்டி யிருக்கும். அதாவது ஒரு குறிப்பிட்ட வரையறைக்கு மேற்பட்டு பிரைவேட் சொத்து இருக்கக் கூடாதென்று செய்ய வேண்டும். தற்கால லாப முறைக்குப் பதிலாக உயர்ந்த லக்ஷியத்துடன் கூடிய கூட்டுறவு ஊழிய முறையை ஏற்படுத்த வேண்டும். இறுதியில் நமது சுபாவங்களையும் பழக்க வழக்கங்களையும் விருப்பங்களையும் மாற்ற வேண்டுமென்பதே இதன் அர்த்தமாகும். சுருங்கக் கூறமிடத்து அபேதவாத முறை என்பது புதிய நாகரீகமாகும். இது தற்கால முதலாளி வர்க்க முறையினின்று அடியோடு மாறுபட்டதாகும். சோவியத் ருஷ்யாவில் இப் புதிய நாகரீகத்தை நாம் சிற்றளவு காணலாம். அங்கு நிகழ்ந்த காரியங்கள் பல எனக்கு மிக்க வருத்தத்தை உண்டாக்கி யிருக்கின்றன. அவற்றை நான் ஒப்புக் கொள்ளவில்லை.

ஆனால் வருத்தமும் துக்கமுமிருந்த இக்காலத்தில் எதிர் காலத்திலேனும் நம்பிக்கையளிக்கக்கூடிய வசீகரமான பெரிய முறையும் நாகரீகமும் அங்கு தான் காணப்படுகிறது. எதிர்காலத்தில் நம்பிக்கை யிருந்திருப்பதற்கு சோவியத் ருஷ்யாவும் அது சாதித்துள்ள பெருங்காரியங்களும்தான் பெரிதும் காரணமாகும். உலகில் மகத்தானவிபத்து ஏதேனும் நிகழாதிருந்தால், இப் புதிய நாகரீகம் இதர தேசங்களுக்கும் பரவி முதலாளிவர்க்கமுறைவளர்த்து வரும் சண்டைகளும் சச்சரவுகளையும் ஒழிக்குமென நான் உறுதியாக நம்புகின்றேன்.

இப் புதியமுறை இந்தியாவில் எப்பொழுது, எப்படித் தோன்றுமென்று எனக்குத் தெரியவில்லை. ஒவ்வொருநாடும் தனது தேசிய விவேகத்திற்கேற்றபடி அபேதவாத முறையை அமைத்துக் கொள்ளுமென நம்புகின்றேன். அதன் முக்கியாம்சம் மாத்திரம் அப்படியே இருக்க வேண்டும். அது தற்காலக் குழப்பத்திலிருந்து உலகில் ஏற்படக்கூடிய புதிய முறைக்குச் சம்பந்தமுண்டாக்கும்.

இதனால் அபேதவாதக் கொள்கையை நான் வெறும் பொருளாதார தத்துவமாகக் கொள்ளவில்லை என்பதும் அது எனது மனத்திற்குப்பிடித்த முக்கியமானவாழ்க்கைத் தத்துவ மென்பதும் விளங்கும்.

நான் ஏன் சுதந்திரத்திற்காகப் பாடுபடுகிறேன்?

என்னுள் உள்ள தேசிய உணர்ச்சி அந்நியர் ஆதிக்கத்தைச் சற்றும் சகிக்காததினால் நான் இந்தியாவின் சுயேச்சைக்காகப் பாடுபடுகிறேன். நான் அதற்காக அதிகமாகப் பாடுபடுவதற்குள்ள காரணம் யாதெனில் தேசிய சுயேச்சையானது, சமூக பொருளாதார மாறுதல்களுக்கு அத்தியாவசியமானதாக இருக்கிறது. காங்கிரஸ் அபேதவாத ஸ்தாபனமாகி உலகில் புதிய நாகரீகத்தை ஏற்படுத்துவதற்குப் பாடுபடும் இதர சக்திகளுடன் சேர்ந்து வேலை செய்ய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஆனால் தற்போதைய அமைப்புடன் கூடிய காங்கிரஸில் பெரும்பான்மையோர் அவ்வளவு தூரம்போகத் தயாராக இருக்க மாட்டார்களென்பதை நான் உணர்ந்திருக்கின்றேன். காங்கிரஸ் தேசிய ஸ்தாபனமாகும். நாம் தேசிய வாதியின் நிலையிலிருந்தே சிந்தித்து வேலை செய்கின்றோம். ஆனால் ராஜீய சுயேச்சையென்ற குறுகிய இலக்கியத்தை அடைவதற்குக்கூட இதுவே போதியதாக இல்லை என்பது வெளிப்படை. இதனால் நாம் சாமன்ய ஜனங்களையும் அவர்களது பொருளாதாரத் தேவைகளையும் பற்றிப் பேசுகிறோம். இப்படி யிருப்பினும் நமது தேசிய உணர்ச்சியின் காரணமாக நம்மிற் பெரும்பாலோர் விசேஷ சொத்துச்சுதந்தரமுடைய சிலருக்கு அச்சமுண்டாக்கக் கூடிய நடவடிக்கையை எடுக்கத் தயங்குகிறோம். விசேஷ சொத்துச் சுதந்திரமுடையவர்களில் பெரும்பாலோர் ஏற்கெனவே நமக்கு விரோதமாக இருக்கின்றனர். ராஜீயப் போராட்டத்தில்கூட நாம் இவர்களிடமிருந்து எதிர்ப்பைத் தவிர வேறெதையும் எதிர்பார்க்க முடியாது.

காங்கிரஸை நிர்ப்பந்திக்க விருப்பமில்லை.

இந் நாட்டில் அபேதவாதமுறை துரிதமாக முன்னேற்றமடைய வேண்டுமென்பதில் நான் பேரவாக் கொண்டிருந்தபோதிலும் நான் காங்கிரஸில் இதனை வற்புறுத்தி அதன்மூலம் நமது சுயேச்சைப் போராட்டத்திற்குத் தடைகளை உண்டாக்க விரும்பவில்லை.

அபேதவாத முறையிலுள்ள பரிகாரத்தை ஏற்கச் சம்மதியாத போதிலும் தேசத்தின் சுயேச்சையாகப் பாடுபடுகின்றவர்கள் அனைவருடனும் நான் சந்தோஷமாக எனது முழுப்பலத்தையும் உபயோகித்து ஒத்துழைப்பேன். ஆனால் எனது நிலையை வெளிப்படையாக எடுத்துச் சொல்லிவிட்டுத்தான் அவ்வாறு செய்வேன். ஏனெனில் அதன் மூலம் நாளடைவில் காங்கிரஸையும் தேசத்தையும் எனது வழிக்குத்திருப்ப முடியுமென நம்புகின்றேன். அது அபேதவாத முறை மூலமே சுயேச்சையை அடையுமென நம்புகின்றேன்.

நாம் சமூகப் பிரச்சினையில் அபிப்பிராய பேதமடைந்தபோதிலும் சுயேச்சையில் கொண்டிருக்கும் நம்பிக்கையின் காரணமாக நாமனைவரும் ஒருங்குசேர முடியுமென நான் நம்புகின்றேன். முன்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)



வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாம் அர னாமமே
சூழ்க வையக முந் துயர் தீர்கவே.

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: தாதுவஸு
சித்திரைமீ கஉவ திங்கட்கிழமை

## சாவாதிருந்துஞ் செத்த சர்வதேச சங்கம்.

—:o:—

சர்வதேசசங்கம் இற்றைக்கு பத்தோன்பது இருபது வருடங்களின் முன் தாபிதமானபோது, இச்சங்கம் அகில உலக சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு ஏற்பட்டதென்று இனிமேல் உலகத்தில் யுத்தம் நடைபெற மாட்டாதென்றும் சொல்லப்பட்டது. அனேகர் அதை மெய்யென்று நம்பியும் விட்டனர். ஆனால் காலகதியில் இந்தச் சர்வதேசசங்கம் தன் பெலவீனத்தைக் காட்டிக்கொடுத்துக் கொண்டே வந்தது. ஜப்பான் ஜர்மனி முதலிய நாடுகள் இந்தச் சர்வதேசசங்கத்தைக் காலகதியில் மதியாதொழிந்தன. இதன் பேடித்தனத்தை இராசதந்திரிக ளெல்லாரும் மெல்ல மெல்ல அறிந்துவிட்டனர். ஆனால் சாமானிய சனங்களும் அபிசீனிய அரசினர்போன்ற சீர்திருத்தங் குறைந்த சில தேசத்தினரும் இதன் கீருத்திரமத்தை உள்ளபடி உணராமல் இதனைநம்பி இப்பொழுது மோசம் போகலாயினர்.

இந்தச் சங்கம் தமக்குத் துணைபுரியுமென்று அபிசீனியர் மனப்பூர்வமாக நம்பியிருந்தமையினாலேயே இப்பொழுது அவர்கள் நாடிழந்து நகரிழந்து பொருளிழந்து உயிரிழந்து ஆபத்தான நிலைமையில் நிற்கவேண்டியவர்களாயினர். இப் பேடிச் சங்கம் தமக்கு உற்ற சமயத்தில் உதவி புரியுந்தானேயென்று நம்பி இத்தலியருடன் யுத்தத்திற்கு இறங்கிய அபிசீனிய சக்கரவர்த்தி இப்பொழுது மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்கியவனுடைய கதியை அடைந்திருக்கின்றார். ஆனால் இச்சங்கத்தை நம்பியதையிட்டு நாம் அந்தச் சக்கரவர்த்தியைக் குற்றஞ் சொல்லுதல் தப்பு; ஏன்? பராக்கிரமம் படைத்த அயிரோப்பிய தத்துவராச்சியங்களென்று பாராட்டப்பட்டு வந்த பிருத்தானியர் பிரான்ஸியர் முதலிய பதினேட்டு இராச்சியங்கள் வரையில் இச் சங்கத்திற் சேர்ந்து உள்ள காலம் முழுவதும் வாக்குவல்லபத்தோடு வீரம் பேசி வந்ததென்றால் இச் சங்கத்தை யார்தாம் நம்பமாட்டார்! இச் சங்கத்தில் யார்தாம் நம்பிக்கை வைக்க மாட்டார்!

இத்தலியர் அபிசீனியருக்குச் செய்யும் அக்கிரமங்களையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கும் இச் சங்கம், அவர்கள் ஒருமுறை இருமுறையல்ல பலமுறை உதவி செய்யுங்கள் வந்த ஆபத்தைத் தடுத்துவிடுங்கள் என்று ஓலமிடக் கேட்டுக்கொண்டு வாளாவிருக்கும் இச்சங்கம், ஜர்மனிய சர்வாதிகாரியாகிய ஹேர் ஹிட்லர் தடுக்கப்பட்டதாகிய றயின்லண்டிற் சைநியத்தைக் கொண்டுபோய் நிறுத்தி அரண்படுத்தப் பார்த்துக் கொண்டிருக்கும் இச் சங்கம், ஜப்பானியர் எள்ளளவும் இலட்சியஞ் செய்யாத இச்சங்கம் ஒருபோதும் அபிசீனியருக்குத் துணைபுரியப் போவதுமில்லை; தன் சொல்லைப் பாதுகாக்கப்போவதுமில்லை. இந்தச் சங்கத்தின் பேடித்தனத்தைக் கண்டல்லவா இருக்கியும் இப்பொழுது "நிமிர்ந்து" நிற்கிறது.

ஆனால் ஒரு இரகசியம் மாத்திரஞ் சொல்லக் கிடக்கின்றது. இச் சங்கத்திலே சேர்ந்த இராச்சியங்கள் தாம் தாம் தப்பிக்கொள்ளலாமென்ற எண்ணத்தினாற்றான் இப்பொழுது அபிசீனியாவிற்கு உதவி செய்யாது நடத்துகின்றன. "அவதந்தாம் தனக்கந்தரம்" என்றபடி முசோலினி அபிசீனியருக்குச் செய்துவரும் அக்கிரமத்தைக் காட்டிலும் நூறுமடங்கான அக்கிரமத்தை விரைவில் இத் தத்துவராச்சியங்களுக்குச் செய்வரேன எவரும் காத்திருக்கவேண்டியதே. இச் சர்வதேசசங்கமானது இப்படியெல்லாங் கேவலப்பட்டுப் போனமைக்குக் காரணம் தெரியாததல்ல. இச்சங்கம் ஆரம்பகாலத்திலேயே உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று சொல்லித் தாபிதமாகிய தல்லவா? எல்லாருமாகச் சேர்ந்து ஜர்மனியை இனியொருகாலமுந் தலையெடுக்கவிட வொண்ணாதென்ற நோக்கத்தை உள் வைத்துக்கொண்டு புறம்பிலே உலக சமாதானத்தைக் காக்கும்படி ஸ்தாபிதமானதென்று நடித்து வந்தமையினாற்றான் இச்சங்கம் இப்பொழுது இப்படியான அவமானத்தை அடைய நேர்ந்தது. இனி ஒருவரும் ஒருபோதும் இச்சங்கத்தில் நம்பிக்கைவைக்க மாட்டாரல்லவா? ஆனதால் இது சாவதிருந்துஞ் செத்ததுபோல் இருப்பதைக் காட்டிலும் எவரும் கலைக்காமல் தானகவே வெயிலைக் கண்ட பனிப்படலம்போல மெல்லக் கலைந்துவிட்டால் அதனாற் பெரும் நன்மையுண்டாம். அங்ஙனங் கலையாதொழிந்தால் அறியாமையோடு கூடிய சாதியினர் சிலர் இன்னமும் இச் சங்கத்தை நம்பி ஏமாறல் கூடுமல்லவா?

## கரையில் நின்றால் நீந்தலாமா?

ஒவ்வொரு விஷயத்திற்கும் இரு பக்கங்கள் உண்டு. நன்மையுந் தீமையும் கலவாத விஷயங்கள் உலகில் இல்லையென்றே சொல்லலாம். ஆயின், ஒரு விஷயத்தில் நன்மையோ தீமையோ அதிகமாக உள்ளது என்பதையே நாம் முக்கியமாக அவதானித்தல் வேண்டும். இற்றைக்கு ஐந்து வருடங்களுக்கு முன், இலங்கைக்கு வந்த டொனமூர் விசாரணைக்குழுவினர் அளித்த அரசியலின்படி, இலங்கைமக்களுக்குக் கிடைத்த பொதுசன வாக்குரிமையும் இத்தகைய விஷயங்களுள் ஒன்றாகும். இவ்விஷயம் சம்பந்தமாகத் தற்போது இலங்கையில் நடைபெறும் இரு பிரபல ஆங்கில தினசரிப் பத்திரிகைகள் தமதுள் வேற்றுமைப்பட்ட கருத்துக்களைத் தெரிவித்து நிற்கின்றன. இவற்றுள் ஒன்று சிங்கள மக்களுக்காகப் பெரிதும் பாடுபடுவது. மற்றையது, பொதுவாக இலங்கையிலுள்ள சிறுபான்மையினராகிய ஐரோப்பிய வருக்கத்தினர்க்காக உழைத்து வருவது. இவை இரண்டும் காய்தல் உவத்தலின்றி விஷயத்தை ஆய்வதாக நமக்குத் தெரியவில்லை. இவற்றில், முந்தியது, பொதுசன வாக்குரிமையால் பெரும்பான்மையினராகிய தமக்கு ஏதோ சம்பத்து வந்துவிட்டது என்றும், பிந்தியது சிறுபான்மையினராகிய தமக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டதென்றும் கருதுவதாகத் தெரிகிறது. அன்றியும், இலங்கை மக்கள் பொதுசன வாக்குரிமைக்குத் தற்போது தகுதியுடையவர் அல்லர் என்றும், அதற்குச் சென்ற பொதுத்தேர்தலே போதிய சான்றாகின்றது என்றும் கூறுகின்றது. இதற்கு திரு. ஈ. டபிள்யூ. பெரோராவின் தோல்வியை ஒரு உதாரணமாகவும் அது எடுத்துக்காட்டுகின்றது. திரு. பெரோரா ஒரு கத்தோலிக்கர். அவரது தேர்தற் றெகுதியைச் சேர்ந்த மக்களுட் பெரும்பாலார் பௌத்தமதத்தினர். இதனால், மதத்துவேஷம் பற்றியே திரு. பெரோரா தெரிவுசெய்யப்படவில்லை என்பது அதன் கூற்று. இவ்வாறே வேறு சில உதாரணங்களையும் அது காட்டும். இதற்கு நேர்மாறாக, மறுபத்திரிகை திரு. பிரீமனின் தேர்தலை உதாரணமாக எடுத்துக் காட்டுகின்றது. திரு. பிரீமன் ஒரு ஐரோப்பியர்; கிறிஸ்தவர். இங்ஙனமாகவும், பௌத்த மதத்தினராகிய சிங்கள மக்கள் அதிகமாக உள்ள அநுராதபுரத்தில் இவரோடு யாரும் எதிர்த்து வெற்றிபெறமுடியாமையே, சனங்கள் மதத்துவேஷம் சாதித்துவேஷம் பாராட்டாமல் தகுதியுடையோரைத் தெரிவுசெய்கின்றனர் என்பதற்குச் சான்றாகின்றது என்பது இதன் கூற்று. டொனமூர் விசாரணைக் குழுவினருள் ஒருவராக இருந்த டக்டர் டிரமண்ட் ஷீல்ஸ் என்பாரும் இந் நியாயத்தையே எடுத்துக்காட்டுகின்றனர். காக்கைக்குத் தன்குஞ்சு பொன்குஞ்சு என்றாங்குத் தாம் அளித்த ஒரு சிலாக்கியமாதல்பற்றி டக்டர் ஷீல்ஸ் அதற்காகப் பெரிதும் வாதிக்கின்றார் என்று மேற்கூறிய சிறுபான்மையோர் பத்திரிகை கூறுகின்றது. இவர்களை நோக்கி நாம் ஒன்று கேட்க விரும்புகின்றோம். இலங்கை பொதுசன வாக்குரிமையைப்பெறுதற்கு எப்போது தான் தகுந்ததாகும்? ஆரம்பத்திற் போதிய பழக்கமின்மையால் சனங்கள் தவறிழைத்திருக்கலாம். காலகதியில் அவர்க்கு அப்பழக்கம் நன்கு கைவாரதோ? அன்றியும், இப்போது நடந்த பிழைகளுக்குப் பொதுசனங்களா பொறுப்பாளிகள்? தந்தலங்கருதி ஏழைச் சனங்களைப் பலவிதமாகவும் ஆட்டி வைக்கும் போலித் தலைவர்கள் துர்ச்செயல்களால் இவை நேர்ந்திராவோ? நீந்தப் பழகுவோர் நீரில் இறங்காமற் கரையில் நின்றபடியே பழகிவிடுதல் முடியுமோ? இவற்றைச் சீர்தூக்கிப் பாராமல் டொனமூர் அரசியற்றிட்டத்தில் திருத்தப்படவேண்டிய எத்தனையோ பெரிய ஊழல்கள் இருப்பவும், அவற்றை விடுத்து, பொதுசன வாக்குரிமையை மாத்திரம் நீக்குதற்காக ஒரு விசாரணைக் குழுவினர் வருதல வேண்டுமென்று கூறும் மனப்பான்மை விரும்பத்தக்க தொன்றன்று. திரு. ஈ. டபிள்யூ. பெரோரா ஆழ்ந்த அநுபவமும், அறிவும், ஆற்றலும் வாய்ந்த ஒருவர் என்பதை எவரும் அறிவர். ஆயின், அவர் பொதுசன ஆதரவைப் பெறத் தவறிய அவ்வளவில் அவர் அநுபவம் பிழைத்துவிட்டதென்றே நாம் கூறுவோம். அன்றியும், திரு. பெரேராவின்மீது இத்துணைக் கருணைகாட்டி, அவர் ஆற்றலிற் பெரிதும் நம்பிக்கைகொள்ளும் அப்பத்திரிகை அவர் அரசாங்கசபையில் தமது திருத்தப் பிரேரணைகளைக் கொண்டுவந்தபொழுது அவர் மீது அநுதாபங் கொள்ளாமைக்குக் காரணம் யாதோ? அப்போது அவரது அரசியல் அநுபவத்தில் அப் பத்திரிகைக்கு நம்பிக்கை ஏற்படவில்லைப் போலும். தலைவர்கள் என்றும், குட்டித்தலைவர்கள் என்றும் இருப்போரே இதற்குக் காரணர் அன்றி ஏழைப் பொதுஜனங்கள் அல்லர். பொதுசனங்கள் தங்கள் உரிமையை இன்று கற்றுக்கொள்ளாவிட்டால் பின் என்று கற்றுக்கொள்வதோ? கரையில் நின்றால் நீந்தமுடியுமோ?

### ஆராய்ச்சியின் சூழ்ச்சி.

காட்டுக் கம்பனை ஆராய்ச்சியாளர் விந்தனைக் காட்டிலுள்ள வேடர் இருவரை அவர்கள் கஞ்சா வளர்த்தார்களென பதுளைப் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றஞ் சாட்ட நீதிபதி நிரபராதிகளாகிய அவர்களுக்கு 2வாரக் கடுஞ் சிறைத் தண்டனை விதித்துவிட்டனர். இது சென்றவருடம் நடந்தது. இப்பொழுது பிரதிநிதியாகக் கடமை பார்த்த ஒரு ஆராய்ச்சி வேடர்களல்லாத வேறு இரு கிராமவாசிகள் தான் அக்குற்றத்தைச் செய்தனரெனக் கண்டுபிடித்து அவர்களை நீதித்தலத்தில் ஒப்புவிக்க அவர்கள் விசாரணையின் பின் குற்றவாளிகளெனக் காணப்பட்டனர். ஒன்றுமறியாதவர்களாகிய வேடர்களைச் சிறைத்தண்டனைக்குள் ஆக்கியதற்காகப் பொலிசார் இப்பொழுது அந்தப்பழைய ஆராய்ச்சி மீது குற்றஞ் சாட்டி வழக்குத் தொடர்ந்திருக்கின்றனராம்.

### மோட்டார்பஸ் விபத்துக்கள்.

கொழும்பு-காலிப்பாதையில் ஒலிக்கண்டா என்னுமிடத்திற் கணித்தாக வரும்போது பிரயாணிகளை ஏற்றிய ஒரு மோட்டார் பஸ் எதிரே வந்த ஒரு மோட்டாரதனில் மோதுண்டு புரண்டுவிடவே, அதிலிருந்த ஒரு சிறுமி அக்தாத்தில் ஏற்றுண்டு, வீழ்ந்து உடனே இறந்தாள். பிரயாணிகள் பலர் போதுமான ஊறடைந்தனர். ஊறடைந்த பிரயாணிகள் 23 பேராம். பஸ் முற்றாகச் சிதைந்து போய்விட்டது. மோட்டாரதத்தில் வந்தவர்களும் சிறிது ஊறடைந்தனர். ரதமும் சிறிதுபழுதுற்றதாம்.

# அரிமாநோக்கு.

### புண்ணியவான் போய்விட்டார்

சென்ற ஐந்து வருட காலமாக இந்தியாவைப் பரிபாலனஞ் செய்து வந்த வில்லிங்டன் பிரபு போய்விட்டார். வட்டமேசை மகாநாட்டினின்றும் திரும்பியவுடன், சமாதானம் ஏற்படுத்தும் நோக்கமாக, புண்ணியவான் காந்தி பேட்டி கண்டு பேச விரும்பியபோது, அதை மறுத்த புண்ணியவான் போய்விட்டார். போனவர் வாளாபோய்விடவில்லை. பாரதமக்கள் பன்னெடுங்காலமாக ஞாபகத்தில் வைத்து வாழ்த்துப்பா பாடக்கூடிய பராமரயாளம் நிறைந்த செயல்களைச் செய்துவிட்டே போயுள்ளார். அப்படியன்றோ இருத்தல் வேண்டும்? பிரபுவுக்கு இலக்ஷணம் அதுதானன்றோ? இப்பிரபுவின் காலத்தில் அடக்குமுறைகளும் அவசரச்சட்டங்களும் ஆள் தூக்கிப் பூதங்களும் புற்றீசல் போலப் பொலபொலவெனக் கலகலெனப் புறப்பட்டன; இப்பிரபு ஒரு சமல் மின்னி முழங்கி காடெங்கும் கூகிர இடித்தார். எத்தனையோ முறை காங்கிரஸ் கூட்டங்களைக் கலைத்தார். வரி கொடுக்க மறுத்த கூர்ஜர வாசிகளை வீடுவாசல்களையும் நாடு நிலங்களையும் விட்டுக் காடு நோக்கி ஓடச்செய்தார். தியாகச் செல்விகளைப் பொலிஸார் அவமதிக்கவும், புடைக்கவும் பார்த்திருந்தார். செல்வத் தேசாபிமானிகளைச் சிறையிலிட்டார். இன்னும் என்னென்னவோ எல்லாம் செய்தார். இவரது செங்கோன்மையின் கீழன்றோ ஜவஹரின் அருமைப் பத்தினி, பாரதேவியின் பெருமைப்புத்திரி, ஸ்ரீமதி கமலா நேரு தாயின் மானங்காக்க நேயமாய்ச் சிறைசென்று நோய்வாய்ப்பட்டுத் தன் உயிரையும் அவ்வன்னையின் செம்பாதப்போதுக்கு அர்ப்பணஞ் செய்தனள்? அதினாலென்? இத்தகைய புண்ணியவான் இம்மாதம் 18ந் திகதி இந்தியாவை விட்டுப் போய்விட்டார் இவருக்குப் பதிலாக பிரபு லின்லித்கோ வந்திருக்கிறார். இவர் பெருமை இப்போது எம்மால் அளவிடுதற்குரியதல்ல. ஆனால், போனவருக்குப் பிரியாவிடையும் வந்தவருக்கு உபசரணையும் செய்தற்கு மாத்திரம் மனம் விழைகின்றது.

### அறிந்து செய்வாராக.

யாழ்ப்பாணம் நகரசபை "முனிசிப்பல் கவுன்ஸி"லாக மாற்றப்பட வேண்டுமென ஸ்தலஸ்தாபன மந்திரியாகிய திரு. எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயகா ஆலோசிக்கிறார் என்று சின்னாட்களுக்கு முன் செய்தி வெளியிடப்பட்டது. இது தக்கதா? தகாததா? சனங்களின் ஆதரவைப் பெறக் கூடியதா? என்பது கேள்வி. யாழ்ப்பாணம் ஒரு முனிசிப்பல் கவுன்ஸிலை உடையதாக வருதற்கேற்ற நிலப்பரப்பையுடையது; பெரிய வருமானத்தை யுடையது அன்றியும் இது ஒரு பிரதானமான பட்டினம். தற்போது இங்குள்ள நகரசபை போதிய அளவு வளர்ச்சியடைந்து மிருக்கிறது. அதன் வேலையும் அதிகரித்துவிட்டதென்றே கூறுவோம். பாதி நேரம் சட்டத்தொழிலாளராகவும், பாதி நேரம் இச்சபையின் தலைவராகவும் கடமை பார்த்து வருவோரால் இவ்வேலையைச் செவ்வனே செய்து முடிப்பது சாத்தியப்படாது. இதற்கென முழுநேரத்தையும் செலவிடக்கூடியவரும் தேர்ச்சிமிக்கவருமாகிய ஒருவரே இவ்வேலையை வரியிறப் போது திருப்திக்கேற்பச் செய்து முடித்தல் கூடுமென நாம் கருதுகின்றோம். தேர்தல்களிலும் ஏனைய விஷயங்களிலும் தமக்கு நாட்டிற் செல்வாக்கை உண்டுபண்ணக்கூடிய இப்பதவியை இழக்க விரும்பாத சிலர் இந்நகரசபை முனிசிப்பல் கவுன்ஸிலாதலை ஒருபோது விரும்பாதிருக்கலாம். ஆதலால், திரு. பண்டார நாயகா ஒருபாற்கோடிக் கருமம் ஆற்றாது யாழ்ப்பாண மக்களின் பொது அபிப்பிராயத்தை நன்கு அறிந்து செய்வாராக.

### தமிழ்த்தொண்டன் உயிர்துறந்தார்.

தமிழ்த்தாய்க்கு அரிய தொண்டாற்றிப் புத்தபொளித்து வந்தவராகிய தமிழ்ப் பேராசிரியர் திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் இகவாழ்வை ஒருவினார். இறக்கும்போது இவருக்கு வயது 60. இவர் உயிர் துறந்தமைகேட்டு வருந்தாத தமிழர் இரார் என்றே கூறலாம். முதலியார் அவர்கள் தாளாண்மை மிக்க வேளாண் குலத்தில் உதித்தவர். மேரி இராணியார் கல்லூரியிலும் சென்னை அரசினர் மாகாணக் கல்லூரியிலும் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்து மாணவர்க்குத் தமிழில் சுவை பிறக்குமாறு கற்பித்து வந்தவர். இருபதாண்டுகளுக்குமேலாக இவர் சென்னைச் சர்வகலாசாலைத் தமிழ் நிர்வாகசபைத் தலைவராகவும் இருந்து தொண்டாற்றினர். ஆண்டுதோறும் வரும் தைத்திங்கள்களில் "தமிழ்த் திருநாள்" என்ற விழாவையும் நடத்திவந்தவர். இன்னும் தமிழருக்கென உழைத்தற்காகப் பல சங்கங்களை நிறுவினார். தமிழ்ப் பண்டிதர்களின் நிலைமையைச் செம்மைப்படுத்துதற்காகப் பன்முறையும் உழைத்துவந்த உத்தமர். முதலியர் அவர்கள் பாடசாலைமாணவர்கட்குப் பாடப்புத்தகங்களாகப் பல நூல்களை இயற்றியுள்ளார். இத்தகைய பெரியாரின் மரணம் பொதுவாகத் தமிழ்ப்பற்றுடையோருக்கும் சிறப்பாகத் தமிழறிஞர்கட்கும் பெரிதும் விசனத்தை அளிக்கத்தக்கதாம். இன்னாரின் ஆன்மா சாந்தியடைவதாக.

## கோட்டுச் செய்திகள்

### மாமனை அடித்த மருகர்.

காரணம் தெரியவில்லை.

சென்ற 24-4-36-ல் இருபாலையைச் சேர்ந்த நியாயதுரந்தரர் திரு. இரத்தினசிங்கத்தின் யாழ்ப்பாணச் சிதாரியிலுள்ள கந்தோரில் மேற்குறித்த நியாயதுரந்தரர் இருக்கும்போது அவருடைய மருகன் முறைபூண்ட நாகலிங்கம் அருளம்பலம் என்பவர் அவ்விடம் சென்று நியாயதுரந்தரரை அழைத்ததும் அவர் அங்கு சென்றதும் (அருளம்பலம்) ஓர் தடியால் அடித்தார். உடனே நியாயதுரந்தரருடைய கிளார்க் ஓடிவந்து எதிரிக்கு அடித்தார். இச்சமயத்தில் நியாயதுரந்தரர் அவரை மற்றவர்கள் மேலும் அடிக்காமலும் வேறு எவ்வித சேஷ்டையும் செய்யாமலும் எதிரியைப் பொலிசார் வசம் ஒப்புவித்தார். எதிரி பொலிசாரின் மேற்பார்வையில் இருக்கிறதாகச் செய்தி எட்டுகிறது. மேற்குறித்த எதிரி இப்படிச் செய்ததின் காரணம் என்ன என்பது நியாயதுரந்தரர்க்குப் புலப்படவில்லை.

—

### தப்பிஓடியவனுக்குப் பிரம்படி

சென்ற ஏப்பிரல் 23-ம் திகதி யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் புத்தூரைச் சேர்ந்த இராமன்-நீலன் என்னும் 14 வயதுச் சிறுவன் கைவிலங்குடன் அவ்வூர் மணியகாரனுடைய பாதுகாப்பிலிருந்து தப்பி ஓடியதாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் எதிரி குற்றவாளியென ஒப்புக்கொண்டமையால் எதிரிக்கு ஆறு பிரம்படி அடிக்கும்படியாகக் கோட்சாரசனிடம் நீதிபதி கூறினார்.

தொடர்ச்சி 5ம் பக்கம்,

# காரம்பனில் கொலை!

## வலைஞன் மாண்டான்; மற்றும் இருவர் காயமுற்றனர்.

### "உள்ளி வாங்கப்போன என்னை எதிரி தள்ளிக்குற்றினன்;' "வந்தேறு குடிகளுக்கெல்லாம் மமதையா?"

சென்ற வெள்ளிக்கிழமை, ஊர்காவற்றுறைப் பொலிஸ் நீதிபதி, காரம்பனில் வியாழக்கிழமையன்று நடைபெற்ற ஒரு கொலை சம்பந்தமாக விசாரணை நடத்தினர். இதில், குருசமுத்து என்னும் வலைஞனொருவன் மாணமடைய, வைத்திநாதன் சந்தியா என்பவனும் மரியாப்பிள்ளை என்னும் ஒரு பெண்ணும் காயமடைந்தனர். இது சம்பந்தமாக, ஹெரெட் சின்னோ வில்லியம் என்னும் சிங்களவன் ஒருவன் எதிரியாகக் குற்றஞ் சாட்டப்பெற்று இன்ஸ்பெக்டர் அட்டிகலையால் கொண்டுவரப்பட்டான். விசாரணையில் வைத்தியநாதன் சந்தியா கூறிய சாக்ஷியமாவது:—

என்வயது 39 நான் ஒரு கலையான். இம்மாதம் 23ந் திகதி வியாழக்கிழமை காலை 5மணியளவில் குருசுமுத்துவின் வீட்டில் சத்தம் கேட்க நான் அங்கு ஓடிச் சென்றேன். எதிரி குருசுமுத்துவைத் துரத்திக்கொண்டு ஓடிக் குத்தினன். நான் ஒரு தடியை எடுத்து, எதிரியின் காதிலும் முதுகிலுமாக இரண்டு முறை அடித்தேன். எதிரி திரும்பி என்னைத் துரத்தினன். நான் ஓடினேன். அவன் தொடர்ந்து வந்து என் வலது பக்கத்தில் குத்தினன். நான் அறிவு மயங்கி நிலத்தில் விழுந்தேன் மரியாப்பிள்ளை என்னும் பெண் எதிரியைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். எதிரி அவளையும் விழுத்தினன். அதன் பின் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியவில்லை. இறந்தவன் வலையைவிரித்துக் கொண்டு நிற்ற போதே எதிரி அவனைத் துரத்திச் சென்று குத்தினன் அவன் கையில் இருந்த கத்தி வில்லுக் கத்தியாகும்."

காயமுற்ற மரியாப்பிள்ளை என்பவள் கூறியதாவது:—

என்வயது 46. நான் காரம்பனில் வசிப்பவள். நேற்று காலை 6 மணியளவில் எதிரி இறந்தவரைக் குத்தி மற்றவனைக் காயப் படுத்தியபோது நான் ஓடிப்போய் எதிரியைக் கட்டிப் பிடித்துக் கொண்டேன். எதிரி தன்னை விடுவித்துக்கொள்ள முயன்றான். நான் விடவில்லை. அவன் புறங்கையில் கத்தியாற் குற்றினன். அன்று எனக்குக் காதுக் குத்து ஏற்பட்டிருந்தமையால் உள்ளி வாங்குதற்காகவே குருசுமுத்து வீட்டிற்குப் போயிருந்தேன். அங்கு நான் போகும்போது, அவர் வீட்டு முற்றத்திலிருந்து தன் தோணியின் பாய்ச்சீலையைத் திருத்திக்கொண்டிருந்தார். எதிரிவந்து 'நேற்று இங்கு நடந்த கலகம் என்ன?' என்று விசாரித்தார். அதற்குக் குருசுமுத்து அது ஏதோ வீட்டுக் கலகமென்றும் அதற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமுமில்லையென்றும் கூறிவிட்டுத் தன் வேலையைச் செய்து கொண்டிருந்தார். எதிரிதான் கேட்டதற்குப் பதில் கூறி மற்ற அலுவலைப் பார் என்று சொன்னான். குருசுமுத்து அவனை நோக்கி வீட்டை விட்டு வெளியே செல்லும்படி கூறினார். எதிரி தன் அரையிலிருந்த கத்தியை உருவி இருமுறை அவரைக் குற்றினன். சந்தியா என்பவர் ஓடிவந்து எதிரியின் கையைப் பிடித்தார். எதிரி அவரையும் தள்ளி விழுத்திக் குற்றினன்.

எதிரி கூறியதாவது-

"நான் தோட்டத்திலே புகையிலைக் கன்றுக்குத்தண்ணீர் பாய்ச்சின பின் என் வீட்டுக்குப்போய்த் தேத்தண்ணீர் குடித்துச் சுருட்டுப் பற்ற வைத்துக் கொண்டு மீண்டும் தோட்டத்திற்குத் திரும்பினேன் போகும்போது இன்னாசியும் குருசுமுத்துவும் தங்கள் தங்கள் வீட்டு முற்றங்களில் இருந்தார்கள். குருசுமுத்து என்னை நோக்கி 'வந்தேறிகளுக்கெல்லாம் மமதை அதிகரித்து விட்டது. நீ அடிபடாமல் கவனமாக உலவு' என்று கூறினர்.

"நீ அடித்தால் நான் படத்தானே வேண்டும்" என்று நான்பதில் கூறினேன். "வாயை மூடிக்கொண்டு போடா" என்று சந்தியா என்பவர் சொன்னார், 'உனக்கும் எனக்கும் ஒரு அலுவலும் இல்லையே, நீ என் என்னோடு சண்டைக்கு வருகிறாய்" என்று நான் கூறினேன். சந்தியாவும் இன்னாசியும் குருசுமுத்துவும் என்மடியைப் பிடித்தார்கள். இன்னாசி என கத்தியை இழுத்தெடுத்தார். இன்னும் பத்துப்பேர் வந்து என்னை அடித்தார்கள். நான் இன்னாசியைப் பிடித்துக்கொண்டு என கத்தியைப் பறித்து விரித்தேன் இன்னாசி ஒரு சத்தகத்தையும் வைத்திருந்தது கண்டேன். நான் குருசுமுத்துவைக் குத்திக் கத்தியைச் சுழற்றினேன். அப்போது ஆராருக்கெல்லாம் காயமேற்பட்டதோ எனக்குத்தெரியாது. கிராமம் போனதும் ஏலாக்குறைந்து வந்தது உடனே நிலத்தில் இருந்தேன். சிறிது நேரத்தின் பின் எழுந்துபோய் கிணற்றில தண்ணீர் அள்ளிக் குடித்தேன். அதன் பிறகு ஒரு சயிக்கிளை எடுத்துக்கொண்டு விதானை வீட்டுக்குப்போனேன். விதானையார் வீட்டில் இல்லை. பொலிசாரிடம் போனேன். என் கத்தியை எங்கே போட்டேன் என்பது எனக்குத் தெரியாது.

## NOTICE OF SALE OF LAND

### காணி விற்பனவு விளம்பரம்.

யாழ்ப்பாண டிஸ்திரிக்கோட்டின் 8871ம் இலக்க வழக்கில் 1936 ஸு பங்குனி மீ 3ந் தேதியைக் கொண்ட கோட்டுக்கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணி 1936ஸு வைகாசி மீ 23 ந் தேதி சனிக்கிழமை பிற்பகல் $4\frac{1}{2}$ மணி தொடக்கம் அந்தந்த காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில விற்கப்படும்.

விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் கிழக்கு புத்தூர் கோவிற்பற்று சிறுப்பிட்டியிலுறை கொதரியான் சீமா பரப்பு நில. இலா 5 பனைகளும் வான்பயிர்களும் எல்லைகிழக்கு இரண்டாம் எதிரி வள்ளிப் பிள்ளையின் ஆதனம் வடக்குஎதிரிகளினுடைய ஆதனங்களும் மறுபேர்களுடையதும் மேற்கு நாலாம் எதிரி பொன்னம்பலத்தினுடைய ஆதனமும் மறுபேருடையதும் தெற்கு ஒழுங்கை இக்காணியில் உள்ள கிணற்றில காலில் ஒருபகுமுட்பட K 26/85ம் இலக்கத்தில பதிவு.

2 மேற்படி இறை நாவேயடி வயல் பர. நில. இலா. 27 எல்லைகிழக்கு மூசகதம்பி பூதத்தம்பியின் ஆதனமும் நாலாம் எதிரி வேலாயுதர் பொன்னம்பலத்தின் ஆதனம் வடக்கு ஆறுமுகம் பெண் அம்மாவின் ஆதனம் மேற்கு தம்பிப்பிள்ளை குமாரசாமியின் ஆதனம். தெற்கு சிதம்பரம் அம்பலவாணசுவாமி கோவில ஆதனம் மேற்குப்புறத்தே உள்ள தம்பிப்பிள்ளை குமாரசாமியின் ஆதனத்தில் இருக்கும் கிணற்றில் பங்கும் பதிவு K 29/86.

3 பிரசித்தநொத்தாரிசு ஏன் சுப்பிரமணியம் மூலதாவில 1932ம் ஆண்டு வைகாசி மாசம் 30ந் திகதி 1091 இலக்கத்தில முடிக்க ஒற்றிஉறுதியில் முதலாம் எதிரிக்கு உரியஉரிமை உருதது சேர்க்கை முழுவதும் இக்ஒற்றி உறுதியில சொல்லப்பட்டகாணியாவது

வலிகாமம் கிழக்கு புத்தூர் கோவிற்பற்று சிறுப்பிட்டியிறை மிதியாலுவதலை தோட்டம் பர. செ. இலா. $3\frac{1}{2}$யும் மிதியாலுவதலைத் தோட்டம் பர. செ. இலா. $7\frac{1}{4}$ ஒருமிதது பர. செ. இ $10\frac{3}{4}$ எல்லைகிழக்கு சிதம்பரம் அம்பலவாணசுவாமி கோவில் ஆதனங்களும் கார்த்திகேசு பெண் சின்னப்பிள்ளையின் ஆதனமும் வடக்கு வைத்திலிங்கம் வயிரமுத்தவின் ஆதனங்களும் மறுபேர்களுடையதும மேற்கு கதிர்காமபி தம்பையாவினதும் தம்பிப்பிள்ளை குமாரசாமியினுடைய ஆதனங்கள். தெற்கு கார்த்திகேசர் வெற்றிவேலுவினதும் முதலித்தம்பி விசுவநாதரினதும் சிதம்பர அம்பலவாணசுவாமி கோவில் ஆதனங்களும் வடக்கேகாரநாதர் தம்பையாவினது ஆதனத்தில உள்ள கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் வைத்திலிங்கம் வைரமுத்தவின் இக்காணிக்குடாக வழிவாய்க்கால் உரிததும்.

வீ. செல்வத்துரை,
கொம்மிஷனர்,
5-3-36.

சீர்வேலி பூதத்தப்பிள்ளை தந்துரை வழக்காளி

Vs

சிறுப்பிட்டி 1. குழந்தைவேலு சின்னையா 2. பெண் வள்ளிப்பிள்ளை 3. மாதவர் வேலாயுதர் மகன் பொன்னம்மா 4. வேலாயுதர் பொன்னம்பலம்.

19-4-36.

(Mis. 20. 27-4-36.)

# கோட்டுச் செய்திகள்.

4ம் பக்கத் தொடர்ச்சி.

### பஸ் சொந்தக்காரருக்கு அபராதம்.

அதிகமான பிரயாணிகளை ஏற்றியதாக

சென்ற 23-4-36-ல் யாழ்ப்பாணம்பொலிஸ் கோட்டில் காரைதீவில் வசிக்கும் அருணாசலம்-முருகேசு என்பவர் X 3519 இலக்கமிட்ட மோட்டார் பஸ்ஸில் ஏற்ற வேண்டிய சனத்தொகையிலும் பார்க்க ஒரு ஆள் கூட ஏற்றியதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் எதிரி குற்றவாளியென ஒத்துக் கொண்டமையால் எதிரிக்கு நீதிபதி 10 ரூபா அபராதம் விதித்தார்.

24-4-36 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் சாவகச்சேரியில் வசிக்கும் ஆறுமுகம் முத்தையா என்பவருடைய X 9339 இலக்கமிடப்பட்ட மோட்டார் பஸ்ஸில் ஏற்றவேண்டியசனத்தொகையிலும் மேலதிகமாக 6 பேரை ஏற்றிய குற்றச் சாட்டில் எதிரி குற்றவாளியென ஒப்புக் கொண்டதின் பேரால் நீதிபதி எதிரிக்கு 20 ரூபா அபராதம் விதித்தார்.

### காரை விரைவாய் ஓட்டியதால் மரணம்.

சாக்ஷிகள் விசாரணை

சென்ற ஏப்பிரல் மாசம் 23-ம் உ யாழ்ப்பாணம் பொலிஸ கோட்டில் காசிப்பிள்ளை—செல்லையா என்பர் புத்தூர் றோட்டில் காசி-வைரமுத்து என்பவர் தனது செலுத் காரை மிகவும் கவலையீனமாகச் செலுத்தினதால்தான் அவர் விழுந்து இறந்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்காளி சார்பாக பொலிஸ் உதவிப் பரிசோதகர் திரு. உகைவமனும் எதிரி சார்பாக நியாயதுரந்தரர் சாம் சபாபதியும் வாதித்தனர்.

அருளம்பலம் - கமலியாயம் கூறிய சாக்ஷியமாவது நான்புத்தூ ல்வசிப்பவன்சென்ற தைமீ 21-ம்திகதி நான் யாழ்ப்பாணத்திலிருந்து புத்தூர் அச்சுவேலி றோட்டுமார்க்கமாகப் புத்தூருக்குச்செனறேன் இந்த எதிரியினுடைய கார் அச்சுவேலிப்பக்கத்தால் பட்டணம்வந்தது. அதுவரும்போது மிகவும் வேகமாகவும் வளைந்து வளைந்தும் வந்தது. கொஞ்சத்தூரம் வந்ததும் றோட்டைவிட்டுக் கல்லுள்ளவெளியான இடத்துக்கு ஓடியது. இந்த நேரத்தில் இன்னுமொருகார் எதிர்ப்பக்கமாக வந்தது. அது நியாயமாகத்தான் (விரைவாகவல்ல) ஓடிவந்தது

ஆனால், அது வரவேண்டிய சரியான பக்கத்தால் தான் வந்தது. அச்சுவேலிப் பக்கத்தால் வந்த கார் ஓர் கள்ளி மரத்தில் போய் மோதுண்டு அப்புறம் போய் ஓர் கல்லின் மேல் ஏறிக் குதித்தது. அப்போது காசி-வைரமுத்து காரிலிருந்து தலைகீழாக விழுந்தார். நான் போய்க் காயப்பட்டவனைப் பார்த்தபோது மற்றக்காரில் இருந்தவர்களும் வந்து பார்த்துவிட்டுப் போய்விட்டார்கள்.

நான் பட்டணத்தால் வந்தகாரின் இலக்கத்தையும் அதில் இருந்த ஆட்களையும் பார்க்கவில்லை. இந்த எதிரி தான் விழுந்தவனின் காரைச் செலுத்திவந்தார். அந்த றோட்டில் இந்த 2 காரையும் விட மூன்றாவது காரும் போகக்கூடிய இடமிருந்தது. இறந்தவன் இவ்வெதிரியின் காரில் தான் ஏற்றிச் செல்லப்பட்டான். நான் எதிரிக்கு அருகாமையில் செல்லாதபடியால் குடியின் மணத்தால் குடித்தவர் என்று சொல்லமுடியாது ஆனால் அவருடைய நிலைமைத்தைப் பார்த்தால் குடித்தவர்போல் காணப்பட்டார் இவ்வெதிரி வரும்போது 'ஹோரண்' அடிக்கவில்லை.

சேனாதிராசா கல்லதம்பி ஆகிய இவர்கள் சாட்சியம் கூறிய பின் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

### கழுத்துறையில் கொள்ளை நோய்.

கழுத்துறையில் ஆற்றங்கரைத் தெருவிற்கு அணித்தாக வசித்த ஒருபெண் கொள்ளைநோய் கண்டு இறந்தாளாம்.

# இத்தலிய-அபிஸீனிய யுத்தம்.

## அபிசீனிய இளவரசரின் வெற்றி.

அடிஸ் அபாபா
ஏப்பிரல் மீ 22உ

அபிஸீனியச் சக்கரவர்த்தியின் விண்ணப்பம்.

அபிஸீனிய சக்கரவர்த்தி தனது கண்களில் நீர்ததும்ப உலக நிச் சபாசார நிருபருக்குப் பின் வருமாறு கூறுகின்றார்:-

"அபிஸீனியச் சரித்திரத்திலே எக்காலத்தாயினும் இப்படியான ஆபத்து நேர்ந்ததாக நாங்கள் படித்ததுமில்லை. கேட்டதுமில்லை நாங்கள் பிறருக்குத் தீமைசெய்யாத சுவாதீனத்தோடு கூடிய சாதியினராவோம். சத்துருக்கள் இங்கே வந்து செய்யும் அக்கிரமத்தை நீதியான எந்தத் தத்துவராச்சியமும் தடுக்கவேண்டியது. அப்படித் தடுப்பதற்கு இன்னமும் இடமுண்டு அபிஸீனியர் தோல்வியடைந்தனரென்று எண்ணிக்கொள்ளவொண்ணாது. இறுதிவரையில் யுத்தஞ் செய்வதற்கு ஆயத்தமாக இருக்கிறோம் இந்தத் தலைநகரைவிட்டு நான் ஒருபோதும் வெளியே போகமாட்டேன். பிருத்தானியர் நீதிக்கும் சுவாதீனத்திற்கும் பாதுகாப்பாளரெனச் சொல்லப்படுகின்றனர் அவர்களும் சுவாதீனத்தைவிரும்பும் பிரான்சியரும் உலகத்திலுள்ள எந்த அரசினரும இந்த ஆபத்தான சமையத்தில் எங்களைக் காக்கக் கடவர்'

### புதிதாயிட்ட தெருக்களைச் சிதைக்கின்றார்கள்

தெசியிலிருந்து தலைநகருக்குப் புதிதாக இத்தலியர் திறந்து வந்த தெருவீதியை அபிஸீனியர் சிதைத்துவருகின்றனர். இப்படிச் சிதைப்பவர்கள்மீது இத்தாலிய ஆகாயவிமானிகள் வெடிகுண்டு இடுகின்றனர்; அதனையும் பொருட்படுத்தாது குறித்த தெருவீதியிற் பெரும்பாகத்தை அபிஸீனியர் சிதைத்துப் பகைவர் முன்னேறிச் செல்ல வொட்டாது தடுத்துவிட்டனர்.

வேறு சில இடங்களில் கீழே புதிதாக இடப்பட்ட தெருவைக் கழுவிக்கொண்டு போகும்படி மேலே போடும் ஆற்றுநீரின் ஒழுக்கை இத்தலியர் மாற்றிவிட்டனர்.

### அயிரிஷ்கடற்படை வீரனின் அபிப்பிராயம்

"மாரிக்காலந் தொடங்கவே அபிஸீனியர் இத்தலியரைத் தாக்குவார்கள். அதனால் இத்தாலியர் தோல்வியுறுவரென்பது எனக்குத்தெரியும்; இத்தலியர் அபிஸீனியரை வெல்வது அசாத்தியம் மழைக்காலம ஆரம்பமாகவே பழையபடி இத்தலியர் தோல்வியுறுவர்; இத்தலியா மூலமாக வரும் தந்திச்சமாசாரங்களுள் நூற்றுக்கு 75 விகிதமானவை உண்மையல்ல, இத்தலியர் அடிஸ் அபாபாவிலிருந்து 400 மைலுக்கப்பால் நிற்கின்றனர். பல்லாயிரக்கணக்கான இத்தலியர் யுத்தத்தில் மாண்டுபோயினர். முஸோலினி அதிகாரத்திற்கு ஆசைப்பட்டுச் செய்யும இச்சநியான செயலின் உண்மையை இத்தலியிலேயுள்ள பெற்றோர்கள் மனைவிமார் அறிய நேர்ந்தால் முஸோலினி தன்பதவியை இழந்துவிட நேரிடும். இத்தலியர் நச்சுப்புகைக் குண்டுகளை வலைவின்றி உபயோகித்ததை நான் நேரே பார்த்தேன்; அபிஸீனியர் "டம்" "டம்" குண்டுகள் போட்டார்களென்றவதந்தி முழுவதும் பொய்.

### அபிஸீனிய இளவரசரின் வெற்றி

உவாருகெயிலு என்னுமிடத்தில் அபிஸீனிய இராசகுமாரர் பகைவரைப் பலமுறை தாக்கி முன்னேற வொட்டாது தடுத்தனர். தாமாகினமல்ச்சாரலில் தெசி—அடிஸ்அபாபாத்தெருவீதியில் முற்பட்டுச் செய்வதற்கு இத்தலியர் மும்முறை முயன்றபோது, அபிஸீனியர் அவர்கள் செலவைத் தடுத்து மும்முறையும் புறங்கண்டனர். இதனால் அபிஸீனியர் நான்காம் முறை முற்பட்டுச் செல்ல முயலவில்லை இளவரசர் இப்பொழுது தலைநகரை அரண் செய்து பாதுகாக்கும்வண்ணம் அங்குச் சென்றுவிட்டார்.

அடிஸ் அபாபா
23-4-36

டிேஷலாமீடாப் பாதையில் ஒரு பெரிய யுத்தம் நடக்கின்றது இத்தானத்திற்கும் அடிஸ் அபாபாவுக்குமிடையேயுள்ள தூரம் 120 மைல். அபிஸீனியர் தங்கள் தலைநகரை விட்டுப் போவதில்லையென நிச்சயித்திருக்கின்றனர். பல்லாயிரக்கணக்கான அபிஸீனியர் பல திசைகளிலுமிருந்து வந்து தலைநகருக்குச் செல்லும் தெருவுக்கு அணித்தாக மலைகளிலும் காடுகளிலும் அரண் செய்துகொண்டு நிற்கின்றனர். அபிஸீனியர் சிதைத்த தெருவைப் பழையபடி செப்பனிட்டுச் செல்வதற்கு இரண்டு மாச காலஞ் செல்லுமென அளவைப் பகுதி நிபுணர்கள் சொல்லுகின்றனராம.

### யுத்தத்தில் மாண்ட இத்தலியர் தொகை.

இத்தலியர் வெளியிட்ட கணக்கு 1935ம் ஆண்டு ஜனவரிமீ தொடக்கம் 36ம் ஆண்டு ஏப்பிரல்மீ 15உ வரையில் அபிஸீனிய யுத்தத்திலே சகல காரணங்களினாலும் இறந்தவருடைய தொகை 1891. 1935ம் ஆண்டு ஏப்ரெல்மீ 10உ தொடக்கம் 36ம் ஆண்டு ஏப்பிரல்மீ 15உ வரையில் யுத்தத்தில் உடனுக்குடன் உயிரிழந்த இத்தலியர்தொகை 1030. வறடைந்து பின் காணமற்போனவர் தொகை 105 காணமற்போனவர் 53 பேர்.

24-4-36

இத்தலியர்மூலம் வந்த சமாசாரம்.

மழை பெய்யத் தொடங்கிவிட்டால் அடிஸ்அபாபாவைப் பிடிப்பது கஷ்டமென்ற அச்சத்தினால் இத்தலிய சைநியம் ஐந்து அணியாகப் பிரிந்து அடிஸ் அபாபாவை நோக்கி முற்பட்டுச் செல்லுகின்றன. அபிஸீனியர் தடையாக நிர்வகிதவுள்ள 'ஹின்டன்பேர்க்" அணியைச்சிதறச் செய்து தலைநகருக்குப் போதற்கான முயற்சிகள் செய்யப்படுகின்றன.

அடிஸ் அபாபா

ஒக்டனில் நடந்த யுத்தத்திலே இத்தலியர் ஆயிரக்கணக்கான போர் வீரரைப் பறிகொடுத்தனர். இத்தலிய ஆகாயவிமானங்கள் பதிவிற் பறந்தபோது அபிஸீனியர் அவைகளைச் சுட்டு வீழ்த்தினர்.

அடிஸ் அபாபா
25-4-36

இத்தலியர் தூஸ்ஸெபென்னு டக்காபூர் என்னும் இரு பட்டினங்களைக் கைப்பற்றிக்கொண்டனர். இத்தலிய ஆகாயவிமானங்கள் அடிஸ் அபாபாவுக்கு மேலாகப் பறந்து திரிகின்றது. அபிஸீனிய சக்கரவர்த்தியைக் கண்டு பிடிக்கவேண்டுமென்பதே இவ்வாகாய கமனிகளின் நோக்கமாம். தானு வாலிப் பிரதேசத்தைத் தாம் முற்றாகக் கைப்பற்றிக்கொண்டதாக இத்தலியசேனாபதி தெரிவிக்கின்றார்.

### தேகவியோகம்

ஸ்ரீமஸ்ரீ ஜகந்நாத ஐயர்

உடுவில் மீனாட்சி சோமசுந்தரேசுவரர் கோயில் ஆதீனகர்த்தரும் பூசகருமாயிருந்த பிரமஸ்ரீ சி. சதாசிவக்குருக்களின் புதல்வரும் வடமொழி தென்மொழி வல்லுநரும் சிதம்பரம் நாவலர் கலாசாலையிற் பலவருடகாலமாகத் திறமையோடு ஆசிரியராகக் கடமைபார்த்து, பின் யாழ்ப்பாணம் வந்து சிலகாலம் சுன்னாகத்திலுள்ள பிராசீன பாடசாலையிற் கல்வி பயிற்றி வந்தவருமாகிய பிரமஸ்ரீ ஜகந்நாத ஐயரவர்கள் நிகழும் தாது ஸு சித்திரை மீ 6 உ சனிக்கிழமை பின்னேரம், சடுதியில் நோய்கண்டு உடனே இவ்வுலக வாழ்க்கையை நீத்தனர். இவருக்கு வயசு 46. இவரையிழந்து பரிதபிக்கும் மனைவி மகன் சகோதரர் ஏனைய சுற்றமித்திரரின்நிலைமை பரிதாபமானது.

# ஜவஹர்லால் வீர முழக்கம்.

[3-ம் பக்கத்தொடர்ச்சி.]

னர் காங்கிரஸ் அந்தப் பொது வான பந்தத்தின் மூலம் பலவகை யான அபிப்பிராயமுடையவர்களைத் திரட்டி வந்திருக்கிறது. அபிப்பிராயபேதங்கள் முன்னிலும் ஸ்பஷ்டமாகத் தெரிந்தபோதிலும் காங்கிரஸ் முன்போல் பல அபிப்பிராயமுடையவர்களையும் ஒன்றுபடுத்தி வேலைசெய்யும் ஸ்தாபனமாக இருந்துவரவேண்டும்.

காங்கிரஸின் தற்கால லக்ஷியத்திற்கு அபேதவாதமுறை பொருத்தமாக இருக்குமென நான் கருதவில்லை.

**கதர்-சிறு கைத்தொழில் திட்டம்.**

தேசத்தில் துரிதமாகக் கைத்தொழில்களைப் பெருக்கினால்தான் ஜனங்களது தாத்தைப்போதுமானபடி உயர்த்தி வறுமையை எதிர்த்துப் போராட முடியும் என்று நான் நினைக்கின்றேன். இப்படி இருப்பினும் நான் முன்பு கதர் வேலைத் திட்டத்தை நிறைவேற்ற மனப்பூர்வமாக ஒத்துழைத்து வந்திருக்கின்றேன். எதிர்காலத்திலும் அம்மாதிரி ஒத்துழைக்க உத்தேசித்திருக்கின்றேன். ஏனெனில் நமது தற்காலப்பொருளாதார ஸ்திதியில் கதருக்கும் கிராமக் கைத்தொழில்களுக்கும் நிட்டமானதொரு நிலை இருக்கின்றது. அவற்றிற்கு சமூகராஜிய பொருளாதாரத்துறையில் ஒரு மகத்துவமும் மதிப்புமிருக்கிறது.

அதன் மகத்துவத்தையும் மதிப்பையும் அளவிட்டுச் சொல்வதென்பது கஷ்டம். ஆனால் அவற்றின் பலாபலனை ஆராய்ந்தவர்களுக்கு அவை வெளிப்படையாகத் தெரிகின்றன. ஆனால் அவற்றை நமது முக்கியமான பிரச்சினைகளுக்கான பரிகாரங்களாக நான் கருதாமல், இடைக்காலத்திற்கான தற்காலிக சாதனங்களாகவே நான் கருதுகிறேன். இந்த இடைக்காலம் நெடுங்காலம்வரை நீடித்திருக்கலாம். இந்தியாவைப்போன்ற பெரிய நாட்டில் கைத்தொழிற்சாலைகள் ஏற்பட்டு அபிவிருத்தியடைந்த பிறகும், கிராமக் கைத்தொழில்களுக்கு இரண்டாம் பக்ஷமான முக்கிய மிருக்கும். நான் கிராமக் கைத்தொழில் வேலைத் திட்டத்தில் ஒத்துழைத்தாலும் அது சம்பந்தமாக நான்கொண்ட லக்ஷியம் காங்கிரஸிலுள்ள வேறு பலர் கொண்டிருக்கும லக்ஷியத்திலிருந்து மாறுபட்டதாகும். மற்றவர்கள் அபேதவாதமுறையையும் கைத்தொழிற் சாலைப் பெருக்க முறையையும் எதிர்க்கின்றார்கள்.

**தீண்டாமையும் ஹரிசனப் பிரச்சினையும்.**

தீண்டாமை ஹரிசனப் பிரச்சினைகளைப் பல வழிகளில் தீர்க்க முடியும் அபேதவாதிக்கும் இப்பிரச்சினைகள் கஷ்டமளிக்கவில்லை. ஏனெனில் அபேதவாத முறையில் இம்மாதிரியான வித்தியாசமோ அன்றித் தண்டனையோ இருக்க முடியாது. பொருளாதார நிலையிலிருந்து பேசுமிடத்து ஹரிஜனங்கள் பூமியில்லாத எளிய தொழிலாளர்களாவார்கள். பொருளாதாரப் பரிகாரத்தினால் சம்பிரதாயங்களும் பழக்கவழக்கங்களும் ஏற்படுத்தியுள்ள சமூகத் தடைகளை நீக்கிவிட முடியும்.

**புதிய சீர்திருத்தம்; அடிமைச் சாசனம்.**

பிரிட்டிஷ் பார்லிமெண்ட் நிறைவேற்றிய புதிய அரசியல் சட்டத்தையும் அது சம்பந்தமாக நாம் கையாளவேண்டிய முறையையும் பற்றி நீங்கள் சிந்தித்துக்கொண்டிருப்பீர்கள். தற்போது அதனைப் பற்றி நான் பிரஸ்தாபிக்கட்டும். பம்பாய் காங்கிரஸ் கூட்டத்திற்குப்பிறகு இச்சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. பம்பாய் காங்கிரஸின் போது கூட இது எப்படியிருக்குமென்பதைச் சூசகமாகத் தெரிவித்த பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் அரசியல் அறிக்கை நமக்குக் கிடைத்திருந்தது. அதன் பிரிவுகளைப் பற்றி ராஜேந்திர பாபுவின் அக்கிராசனப் பிரசங்கத்தில் கண்டதை விடச் சிறந்த பரிசீலனை வேறு எதுவுமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. காங்கிரஸ், அந்த அறிக்கை மூலம் அளிக்க உத்தேசித்திருந்த அரசியலை நிராகரித்து அதனுடன் எவ்வித சம்பந்தமும் கொள்ளுவதில்லை எனத் தீர்மானித்தது. புதிய இந்திய கவர்ன்மெண்ட் சட்டமானது அரசியலறிக்கையை விட மிக்க பிற்போக்கானது. இதனை நம் மிதவாதிகள் கூடக் கண்டித்திருக்கின்றனர். அரசியல் அறிக்கையை நிராகரித்திருக்கும் நாம் இப்புதிய அடிமைச் சாசனத்தின் விஷயமாக என்ன செய்வதென்றே கேள்வி பிறக்கிறது. இந்த அடிமைச் சாசனமானது ஏகாதிபத்திய ஆதிக்க பாதகங்களைப் பலப்படுத்துகிறது; இது நமது சாமான்ய ஜனங்களை ஏமாற்றிக் கசக்கிப் பிழிந்து வேலை வாங்கிச் சிலர் சௌகரியமாக வாழும் முறையை அங்கீகரிக்கும்.

இச்சட்டத்தில் என்ன அடங்கியிருக்கின்றதென்பதை நாம் சிறிது மறந்து பார்த்தால்கூட இதன்மூலம் அவமானத்தையும் தீங்கையும் நாம் எவ்வாறு மறக்க முடியும்? நமது விருப்பங்கள் மிக்க இகழ்ச்சியுடன் அலக்ஷியஞ் செய்யப் பட்டிருக்கின்றன. நமது வினில் உரிமைகள் நசுக்கப்பட்டிருக்கின்றன. நெடுக அடக்கு முறையைக் கையாளுவது சகஜமாக இருந்து வந்திருக்கிறது. இவ்வளவு அகௌரவங்களுடனும் அவமானங்களுடனும் நமக்குத் தேவலோகத்து கிரீடத்தையே கொடுப்பதாகச் சொன்னாலும் அது நமது தேசிய கௌரவத்திற்கும் சுய மரியாதைக்கும் ஏற்றதாக இல்லை என்ற காரணங்கொண்டு நாம் அதை உதாசீனம் செய்து தள்ளமாட்டோமா? அப்படியிருக்கையில் இந்த அற்ப சீர்திருத்தத்தை லக்ஷியம் செய்வானேன்?

**தயவு தாக்ஷண்யமின்றி எதிர்க்க வேண்டும்.**

அடிமைச் சாஸனபத்திரமொன்றிருப்பதனாலேயே அது அடிமைக்கான ஒரு சட்டமாகி விடாது இதற்கு இப்பொழுது சத்தியாக நாம் நிர்ப்பந்தத்தினால் உட்பட்டு, அவசரச் சட்டங்கள் போன்றவைகளுக்குட்பட்டு நாம் அவமானப்படுத்தப்படினும் இந்த நிர்ப்பந்தமான அடங்கியிருத்தலிலேயே அதை மீறவேண்டுமென்றும் அதை ஒழிக்க வேண்டுமென்றும் எண்ண நமக்கு உரிமை உண்டு.

நமது சட்ட நிபுணர்கள் இப்புதிய அரசியலைப் பரிசீலனைசெய்து அதைக் கண்டித்திருக்கின்றனர். அரசியல் அமைப்புத்திட்டங்கள் என்பது சட்டரீதியான தஸ்தாவேஜுகள் என்பதுமாத்திரமல்ல உண்மையான அரசியல் அமைப்பு என்பது அதிகாரி சம்பந்தங்களைக் குறிப்பதாகுமென்று பர்டினாடு லாஸாலே பார் கூறியுள்ளார். இந்த அதிகாரம் எப்படி இப்பொழுது அமுல் நடத்தப்படுகின்றதென இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். இப்படிப்பட்ட அரசியலைத்தான் நாம் நடத்த வேண்டியிருக்கிறது. சில சமயங்களில் நம்மிடம் கூறப்படும் அழகான வார்த்தைகள் நாம் கேட்டுப்பயனென்ன? தேசமகாஜனங்கள் உண்டுபண்ணிக்கொடுக்கும் கிரியாசக்தியினால் நமக்கு ஏற்படும் தெனபைக் கொண்டுதான் இந்த அரசியலை நாம் தக்கபடி நடத்தவேண்டும்.

தயவு தாக்ஷண்யமின்றிச் சந்தேகமற இந்தப் புதிய அரசியல் சட்டத்தை எதிர்ப்பதெனபதே நமது பான்மையாகவிருக்க வேண்டும். அதை ஒழிக்கவே நாம் ஓயாது பாடுபட வேண்டும்.

**இதை நாம் எப்படிச் செய்யக் கூடும்?**

நான் ஐரோப்பாவிலிருந்து திருப்பி வந்தது முதல், காரியக்கமிட்டியில் உள்ள எனது சகபாடிகளுடன் நான் பூராவாக விஷயங்களை விட்டுக்கலந்து பேசியிருக்கிறேன. அரசியலை எதிர்த்து அதை நிராகரிக்கவேண்டுமென்பதில் நாங்கள் எல்லோரும் ஒருமனப்பட்டிருக்கிறோம். ஆனால் இதை எவ்விதம் செய்வதெனபதில் நாங்கள் எல்லோரும் ஒருமனப்படவில்லை. இதற்கு முன் நாங்கள் எல்லோரும் சேர்ந்தே உழைத்திருக்கிறோம். எதிர் காலத்திலும் இவ்விதமே நாங்கள் ஒத்துழைத்து வருவோமென்பதுதான் எனது நம்பிக்கை. ஆனால் அத்தகைய நிலைமை தக்கபடி இருந்து வரவேண்டுமானால் நமது மனோபாவங்களில் திட்டமான அபிப்பிராய பேத மிருக்கிறதென்பதை நாம் உணர வேண்டும். இந்தப் பிரச்சினை விஷயத்தில் இதை நான் எழுதும் பொழுது காரியக் கமிட்டி எத்தகைய முடிவுக்கு வரப்போகிறதென்பது எனக்குத் தெரியாது. எனது சொந்த அபிப்பிராயத்தையே இங்கு நான் வெளியிடக் கூடும் அது எவ்வளவு தூரம் மற்றக் காங்கிரஸ் காரர்களின் அபிப்பிராயத்திற்கு ஒத்திருக்கிறதென்பதை அறியாமலே அதை நான் வெளியிடுகிறேன்.

ஆனால் ஒன்று நான் தெளிவாகக் கூறவேண்டியிருக்கிறது. பழைய காரியக் கமிட்டி அங்கத்தினர்களில் பெரும்பாலோர் நான் வெளியிடப் போகிற அபிப்பிராயங்களை ஒப்புக்கொள்ளவில்லையென்பதை நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன் ஆனால் நாம ஒருமனப் பட்டாலுஞ்சரி வேறுவித அபிப்பிராயங் கொண்டிருந்தாலுஞ்சரி அல்லது அபிப்பிராய பேதத்தை யுணர்ந்து அவ்வழி நடப்பதென நமக்குள் ஒரு ஏற்பாடு இருப்பதாயினுஞ்சரி நாமெல்லோருஞ் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டுமென்ற அவா எங்கள் எல்லோருக்கும் பூர்ணமாக விருக்கிறது. வேறுபாடுள்ள அம்சங்களை அதிகம் வற்புறுத்தாமல் ஒற்றுமையுள்ள அம்சங்களையே அதிகம்வற்புறுத்தி வருகிறோம். அதுதான் எங்களுக்குச் சரியான வழியாகும். ஜனநாயக ஸ்தாபனமென்ற ஹோதாவில் நமக்கு அது தவிர வேறுவழியுமில்லை.

**ஜனப்பிரதிநிதி சபையமைப்பு**

இத்தகைய சந்தர்ப்பங்களில் புதிய மாகாண சட்டசபைக்குத் தேர்தல் நடக்கும் பொழுது அத்தேர்தல்களில் நாம் போட்டி போடுவதென்பது தவிர நமக்கு வேறு வழியில்லை. ஒரு விரிவான அரசியல், பொருளாதார வேலைத் திட்டத்தை ஆதாரமாகக் கொண்டு நாம் இந்தத் தேர்தல் போராட்டத்தை நடத்த வேண்டும். ஜனப்பிரதிநிதி சபை அமைப்பே இதில் முதன்மையாக [illegible] வேண்டும். அந்த ஜனப்பிரதிநிதி சபை வயது வந்தவர் ஓட்டுரிமையைக் கொண்டு பொதுஜன செல்வாக்கினால் ஏற்படுத்தப்படின், இதைக்கொண்டுதான் நமது வகுப்பு அல்லது அரசியல் பிரச்சினைகளை நாம் தீர்க்கக்கூடுமென்பது எனது திர்மானமான அபிப்பிராயமாகும்.

இத்தேசத்தில் அரைபுரட்சித் தன்மையேற்பட்டு, எழுதப்பட்டுள்ள அதிகாரமிருப்பதாயினும் சரி அரசியல் அதிகாரம் பற்றிய வகையில் பொதுஜன வாக்குக்கு அதில் ஒரு செல்வாக்கு உண்டென ஏற்பட்டால் அல்லது இந்த ஜனப்பிரதிநிதி சபையை நாம ஏற்படுத்த முடியாது. அது எப்பொழுது நடக்குமென நான் கூறுவதற்கில்லை. ஆனால் உலகில் இப்பொழுது ஏற்பட்டு வரும் உணர்ச்சியிலிருந்து இந்தியாவிலோ அல்லது மற்றவிடங்களிலோ நிலைமை உள்ளபடியே நீடிக்குமென்று யாரும் கூறுவதற்கில்லை ஆகவே நாம் எதிர்பார்ப்பதை விட இன்னும் குறுகிய காலத்திலேயே இப்பிரச்னையை நாம் தீர்க்கவேண்டி வரும். ஆனால் இந்த ஜனப்பிரதிநிதி சபை புதிய அரசியல் சட்டத்தினாலோ அல்லது புதிய சட்டசபைகளினாலோ ஏற்பட்டுவிடப் போவதில்லை. இருப்பினும் இக்கோரிக்கையை நாம் வற்புறுத்த வேண்டும் நம் தேசத்தினரும் உலகத்தினரும் இதைக் கவனிக்கும்படிச் செய்ய வேண்டும் அதனால் அதற்கான சமயம் வரும்போது நாம் தயாராகலாம்.

நமது அரசியலைத் தயாரிக்க ஜனப்பிரதிநிதி சபை அமைப்பது தான் சரியான ஜனநாயக சாதனமாகும் அதன் பிரதிநிதிகள் பிரிட்டிஷ்கவர்ன்மெண்டு பிரதிநிதிகளுடன் கலந்து பேசி ஒரு உடன்படிக்கையைச் செய்து கொள்ளக்கூடும் ஆனால் அதனை ஏதோ சமமையேற்படப் போகிறதாக மாத்திரம் எண்ணிக் கொண்டு வேறுவித எண்ணங்கள் மனதில் இல்லாமல் பேசவதில் பயனில்லை. அப்படிப்பட்ட சபை பயனளிப்பதாக இருக்கவேண்டுமானால் அதற்கு உருவான அபிப்பிராயங்கள் முன்னதாக ஏற்பட்டிருக்க வேண்டும். ஒரு கட்டுப்பாட்டுடன் கூடிய கோஷ்டியால் ஒரு ஏற்பாடான திட்டம் வற்புறுத்தப்பட வேண்டும். இந்த சபையை எப்படிக் கூட்டவேண்டும் என்பது போன்றவிவரங்கள் அவ்வப்பொழுது இருக்கக்கூடிய சந்தர்ப்பங்களைப் பொறுத்ததாக விருக்கலாம் அதைப்பற்றி இப்பொழுது நாம் தொந்திரவுப்பட வேண்டுவதில்லை. ஆனால் காங்கிரஸ் என்ற ஹோதாவில் நாம வேண்டுவது என்னவென்பதை அறிந்து அதைத் தெளிவாகவும் திட்டமாகவும் இந்தியா சட்டசபையில் ஆஜர் செய்து அதை கவர்ன்மெண்டு அங்கீகரிக்குமாறு வற்புறுத்தியாக வேண்டும்.

**காங்கிரஸ் செய்தியைப் பரப்புவது நோக்கம்**

நாம் தேர்தலில் நிற்பதற்குக் காரணம் காங்கிரஸ் செய்தியைக் கோடிக்கணக்கான வோட்டர்களிடையேயும் ஓட்டுப்பெறாத மற்றும் கோடிக்கணக்கான ஜனங்களிடையேயும் பரப்புவதாகும். நமது எதிர்காலவேலைத் திட்டத்தையும் கொள்கையையும் அதில் நாம் எடுத்துரைக்கவேண்டும். நாம் பொதுமக்களுக்காகவிருக்கிறோமென்பது மாத்திரமல்லாமல் நாமே அவர்கள்தான் என்பதையும் அவர்களுக்குக் காட்டி அவர்கள் பொருளாதார சமூகக் கஷ்டங்களை ஒழிப்பதில் அவர்களுடன் ஒத்துழைக்க நாம் தயாரெனக் காட்டவேண்டும். நாம் ஓட்டர்களை மாத்திரம் வேண்டிக்கொள்ளப்போவதில்லை. கோடிக்கணக்கான பேர்கள் ஓட்டுப்பெறவில்லை யென்பதை நாம் உணர்ந்து அவர்கள் நமது உதவியை நாடுகின்றனரா வென்பதை அறியவேண்டும். இவர்கள் தான் சமூகத்தின் அடித்தளத்திலிருந்து பிறரால் சுரண்டப்படுகின்றனர் தேர்தல்களில் அதிகாரிகள் அதிகம் தலையிடுவதை நாம் பார்த்திருக்கிறோம். அதையும் தனவந்தரான பிற்போக்காளர் தலையிட்டையும் தேர்தலில் நாம் சமாளிக்கவேண்டியிருக்கும்.

—(வரும்)

## யாழ்ப்பாணம்— திருக்கோணமலைப் பாதையில்

சென்ற வியாழக்கிழமை (23-4-36) யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு திருக்கோணமலைக்குச் சென்ற பஸ் ஒன்று அநுராசபுரம் திருக்கோணமலைத் தெருவில் 43-ம் மைலுக்கு அணித்தாகப் போகும்போது புரண்டுவிட அதிலிருந்த பிரயாணிகளுள் 8 பேர் வீழ்ந்துபெரும் ஊறடைந்து இப்பொழுது திருக்கோணமலை ஆஸ்பத்திரியில் வைத்தியசாலையிற் சிகிச்சை செய்யப்படுகின்றனராம். அச்சமையத்தில் அதிலிருந்த பஸ் சொந்தக்காரனுடைய கால் முறிந்து போய்விட, ஒரு பிள்ளையின் மண்டையும் உடைந்துபோய்விட்டதாம்.

## புகையிரதப்பிரயாணக் கிரயத்தைக் குறைத்தல்.

வருகிற ஜூன் (ஆனி) மாசம் முதல் திகதி தொடக்கமாக இலங்கை அரசாங்கப் புகையிரதப்பகுதியார் பின்வருமாறு கிரயத்தைக் குறைத்து விட நிச்சயித்திருக்கின்றனர்.

மூன்றம் வகுப்புப்பிரயாணிகள் விஷயத்தில் 1மைலுக்கு $1\frac{1}{2}$ சத விகிதம் கிரயம் குறைக்கப்படும். ஆனால் நாவலப் பிட்டியிலிருந்து பதுளைக்குச் செல்லும் மலைநாட்டுப் புகையிரதக்கிரயம் 1மைலுக்கு 2 சதமாகவே யிருக்கும்.

நீடித்த காலத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் (ஸீஸன் ரிக்கற்ஸ்) இரண்டாம் வகுப்புப் பிரயாணச் சீட்டுக்கள் விஷயத்தில் 1ருபாவுக்கு 25 சதவிகிதம் குறைக்கப்படும்.

## கடிதம்.

### இரத்தினபுரிப் பகுதியில் வாழும் யாழ்ப்பாண மக்களுக்கு:

சகோதரர்களே!

நாடெங்கும் தேசாபிமானம் பரவித் தேசப் பொதுச் சேவையில் ஈடுபடத் தொடங்கியதையும் தொடங்குவதையும் கண்டுங் கேட்டும் இருக்கிறீர்கள். தங்கள் தங்கள் சுயதேயத்தைவிட்டுப் பிறதேயங்களில் உத்தியோக நிமித்தமோ வியாபாரநிமித்தமோ வேறு எத்தொழில் நிமித்தமோ குடியேறும் ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் தங்கள் நலனைப் பாதுகாப்பதற்கும் சமூகத்தை விருத்தியடையச் செய்வதற்கும் ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கும் இன்னும் இவை போன்ற நல்வழிகளைக் கடைப்பிடிப்பதற்கும் ஏதுவாயிருக்கும் சங்கங்களை ஆங்காங்கு நிறுவி அதன் மூலம் அன்பைப் பெருக்கி ஒற்றுமையை வளர்த்து நலனைப் பாதுகாத்து மாற்றானுக் கிடங்கொடேல் என்பதை மனத்திருத்திச் சமூகத்தை விருத்தியடையச் செய்தும் வருகிறார்கள். ஆனால் எங்கள் சகோதரர்களோ இவ்வகையான விஷயங்களைக் கவனியாமலும், அப்படிச் சிலரின் உளத்தில் இவ்வெண்ணம் உதித்தாலும் இந்தத் தொந்தரவும் கரைச்சலும் நமக்கேன் என்று எண்ணுவதாலும் இந் நன்னோக்கம் பின்னேக்குகின்றது. இப் பகுதியில் ஆங்காங்கு வதியும் நம் சோதரர்களை ஒருங்குகூட்டி ஓர் சங்கமாய் நிறுவி இரத்தினபுரி யாழ்ப்பாண ஐக்கிய சங்கம் என்னும் பெயரைச் சூட்டிப் பிரமாணங்களைச் செவ்வனே வகுத்து அதன்படி நடாத்தி நமது மக்களின் நலனைப் பாதுகாக்கக் கூடாதா? இதற்கு வழிகாட்டி நடத்தக்கூடிய பரந்த நோக்கும் விரிந்த அறிவும் போதிய ஆற்றலும் படைத்த பெருமக்கள் ஒருவரேனும் இப்பகுதியில் இல்லையா? இருந்தும் இந்தச் சங்கடம் நமக்கேன் என்று வாளாவிருக்கிறீர்களா? பிறந்தநாட்டைவிட்டுப் கருமார்த்தமாக இப்பகுதியில் வந்து வதியும் நாங்கள் ஒருகுடைக்கிழிருந்து ஒற்றுமையாய் நமது சமூக நலனைப் பலவழியாலும் பாதுகாத்து நடத்துவது எவ்வளவு சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் மனவெழுச்சியையும் கொடுக்குமென்பதைச் சகோதரர்களே சிறிது சிந்தித்துப்பாருங்கள்.

எங்களுக்குள் இப்படியான சங்கமும் ஒற்றுமையும் இல்லாக் குறையினாலன்றோ நக்குவானில் நடந்த படுகொலையின் மர்மம் இன்னும் மர்மமாகவே இருக்கின்றது. கேட்பார் யாருமில்லையெனக் கண்ட குருரர் கொத்திக் கொத்திக் காட்டில் விசாதிருப்பரோ? இச் சங்கத்தை நிறுவிப் பெலப்படுத்துவோமானால் பலவழியிலும் நன்மைக் கேதுவாகும் என்பதே சிறியேனின் அபிப்பிராயம். இதைக் கூட்டுவதாலுண்டாகும் துன்பத்தையோ கஷ்டநஷ்டத்தையோ சிறிது பொருட்படுத்தாது இதன் உயர்ச்சியையே பெரிதாய் மதித்துத் தொண்டாற்ற முன் வருவீர்களாயின், இதனால் அடையும் இன்பத்தின்முன் இச்சிறுதுன்பம் எம்மாத்திரம் என்பதை எண்ணுவீர்களாயின் இச் சங்கம் வெகுவிரைவில் முளைக்கும் என்பது திண்ணம். ஆகையால், சகோதரர்களே! இவ்விஷயத்தைப் பற்றி நீங்கள் தனித்தோ, ஒருமித்தோ நிர்க்காலோசனை செய்து இச்சங்கத்தை நிறுவ முன்வாருங்கள்.

இங்ஙனம்
கா. செல்லையா,
காவத்தை

**பல் வைத்தியர்**

டக்டர் வி. சின்னத்தம்பி யாழ்ப்பாண வாடிவீட்டில் ஒவ்வொரு மாதம் 5ம் 6ம் 7ம் 8ம் திகதிகளில் இவ்வூரில் வைத்தியசாலைக்கு சிகிச்சை செய்ய ஆயத்தமாயிருப்பார்.
(Mis. 18. 27-4 to 28-5-36.)

விரைவில் வெளிவரும்! எதிர்பாருங்கள்!!

## கனிஷ்ட பாடசாலை விடுகைத் தராதரப்பத்திர வகுப்பு (1937) [J·S·C·] இலக்கியக் குறிப்பும்,

## சிரேஷ்ட பாடசாலை விடுகைத் தராதரப்பத்திர வகுப்பு (1937) [S·S·C·] இலக்கியக் குறிப்பும்.

இவை சென்னைச் சர்வகலாசங்கத்தாரால் 'வித்துவான்' பட்டம் வழங்கப்பெற்றவரும், இயற்றமிழ்ப் போதகாசிரியருமாகிய வண்ணார்பண்ணை, திரு. ந. சுப்பைய பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்றன. இவைகளில் பதவுரை, கருத்துரை, (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், சொல்லிலக்கணம், சொல் நயம், பொருள் நயம், அணிநயம் முதலியவற்றைவிளக்கும்) குறிப்புரை முதலியன அடங்கியுள்ளன.

சண்முகநாதன் புத்தகசாலை அதிபர்கள்.

(Mis 12. 13-4-36.)

## யாழ்ப்பாணம் ஐக்கியலாப நிதி.

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 134,367 00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறுங் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிருப்பாக 500 ரூபாவிற்குக் குறையாமல் இருக்குமானால் 1 விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்த ஏற்படும் வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம், 8 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடன்கொடுக்கலாம். (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை எமமூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா,
மானேஜர்.

(Y 203. 21-11-35—20-11-36.) (ஜ.)

## ஆரோக்கிய லேகியம்.

சிறந்த மலசுத்தி ஔஷதம்.

மலபந்தமே உங்களின் ஆரோக்கியத்துக்கு இடையூறாகும். ஆரோக்கிய லேகியம் சாப்பிடுவதால் தினசரி கிரமமாய் மலங்கழியும்; சோம்பல் நீங்கும்; தினசரி அலுவல்களுக்கு உற்சாகம் உண்டாகும்.

இன்னும் பித்தபிரகோபம், மூத்திரம் கலந்து போதல், உடம்பு இளைத்து வருதல், கைகால் அசதி, குடைச்சல், நீங்கும். பத்தியமில்லை.

20 ரூபா எடை டின் விலை ரூ. 2-00 தபால்செலவு சதம் 75.

நீரழிவுக்கு.

அப்ரேக் செந்தூரம் கைகண்ட மருந்து.

பரீக்ஷை:—ஒரு மண் கலசத்தில் ஊசி நுழையும்படியான சிறிய துவாரங்கள் போட்டு அதில் ஜலம் விட்டு ஒழுகும்போது நமது அப்ரேக் செந்தூரம் ஒரு சிட்டிகை எடுத்துப் போட்டால் ஒழுகும் ஜலம் உடனே அடைபட்டுவிடும். அதேபோல் சரீரத்தில் அளவுமீறி ஓடும் நீரைக் குறைத்து நீரில் சர்க்கரை இருப்பது, தாகம் வறட்சி இவைகளைக் குணமாக்கும்.

20 நாள் மருந்து விலை ரூபா 12 50 சதம்.

ஸ்பெஷல் அனுபானம் சதாவரி லேகியம் ரூபா 4-00.

தங்கபஸ்பம்.

தாதுபுஷ்டிக்கு ஓர் வரப்பிரசாதம்.

மெலிந்த தேகத்தைப் போஷித்து சரீரத்தில் புதியரத்தத்தை ஊறச்செய்து அளவற்ற பலம், ஆண்மை வீரிய விருத்தி உண்டாகும். பத்தியமில்லை. (விபரமான கேட்லாக் இனாம்.)

30 வேளை தங்கபஸ்பம் ரூபா 10. அனுபானம் லேகியம் ரூபா 2-50.

வெளிநாட்டார் ஆர்டருடன் முன்பணமனுப்பவேண்டும்.

தண்டபாணி வைத்தியசாலை, பழனி.

Q 19. 27-4 to 26 7-36 (Palni S. I.)

## வீ. பீ. நிக்கலஸ் அன் சன்ஸ் (வங்கி)

(1920-இல் ஸ்தாபிக்கப்பட்டது.)

2-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்.

தந்தி விலாசம்: "ஜாவ்ஞாக்" டெலிபோன் இல. 27.

உண்டியல்:—கொழும்பு, இந்தியா, மலாயா முதலிய இடங்களுக்கு நேராகவும் உலகத்திலுள்ள ஏனைய பிரதான இடங்களுக்கு விசேஷ ஒழுங்கு செய்தும் உண்டியல் கொடுக்கப்படும்.

கடன்:—நகைகள் அடைவாகப்பெற்றுக்கொண்டு 12விகித வட்டிக்குப்பணங்கொடுக்கப்படும். தகுந்த பிணையுடன் தினசரிப் பற்றுவரவுக் கணக்கின் பேரிலும் கடனெடுக்கலாம்.

பணமாற்று:—இந்திய சிங்கப்பூர் நாணயங்கள், கோட்டுக்கள் வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கப்பற்தண்டு:—உலகத்திலுள்ள எந்தப் பிரதான துறைமுகத்திலும்போய் இறங்கத்தக்கதாக, கமிஷனின்றி கப்பற்தண்டுகள் எடுத்துக்கொடுக்கப்படும்.

மேற் கூறப்பட்டவைகளும் இன்னும் சகலவித வங்கிமுயற்சிகளும் எமது யாழ்ப்பாணநாட்டினரின் வசதிக்கேற்ற பிரகாரஞ் செய்யப்படும்.

எஸ். பீ. ஜோசேப்,
மனேஜர்.

(Y. 188. 21.10-35—20-10-36.) ஜ

## மனதின் வேலைகள்.

### ஆன்மாவை நோக்கின் விகாரம் ஒழியும்.

### ஸ்ரீ ரமணரிஷியின் கூற்று.

ஸ்ரீ ரமணமகரிஷியவர்களைக் காண்பதற்காக மேனாடுகளிலிருந்து பல ஐரோப்பியர்கள் ஆசிரமத்துக்கு வந்து செல்கின்றனர். அவர்கள் மகரிஷியினிடம் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்து கொள்கிறார்கள். அவர் பல புராணக் கதைகளை எடுத்துக்கூறுவது ருசிகரமாகவிருக்கிறது.

சில தினங்களுக்கு முன்பு மதுரைக் கோயில் சிற்பத்தின் போட்டோ ஒன்று காணாமற் போய்விட்டது. சில நிமிஷங்களுக்கு முன்னர் அதனை அங்கு கூடியிருந்தவர்கள் அனைவரும் பார்த்தனர். மிஸ்டர் மாரிஸ் பிரைட்மன் அந்தப் படத்தைப் பார்க்க விரும்பினர். ஆனால் போட்டோ போனவிடம் தெரியவில்லை. ஸ்ரீ மகரிஷி ஆசிரமத்திலுள்ளவர்களை அதைப் பற்றி விசாரித்தார். அந்தப்படம் அங்கிருந்த பிரஞ்சு மாதிடம் காணப்பட்டது. ஆனால், அந்தப்படத்தை வாங்கிக்கொண்டது அவருக்கே தெரியவில்லை. இந்தச் சம்பவத்தை எடுத்துக்காட்டி மிஸ்டர் பிரைட்மன் ஒரு சந்தேக நிவர்த்தி செய்து கொள்ளப் பிரியப்பட்டார். மகரிஷி இந்தச் சம்பவத்தைப்பற்றி என்ன நினைக்கிறீர் என்று அவர் கேட்டார்.

ஸ்ரீ மகரிஷி கூறியதாவது: நீங்கள் என்னைப் போலந்துக்கு அழைத்துப் போவதாகக் கனவு காண்கிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் விழித்தெழுந்து நான் இன்னின்னமாதிரிக் கனவு கண்டேன். நீ அம்மாதிரிக் கனவு கண்டாயா? அல்லது நான் கனவுகண்டதைத் தெரிந்துகொண்டாயா? என்று கேட்கிறீர். இதை நீங்கள் எப்படி நினைக்கிறீர்கள்.

பிரைட்டன்:- ஆனால் உங்கள் கண்முன்னால் நடப்பதே உங்களுக்குத் தெரியாதா?

ஸ்ரீ மக:- இவையாவும் மனதின்வேலைகள் என்று கூறி பின்வரும் கதையைத் தெரிவித்தார்.

சீதை காணாமற் போய் இராமன் அவளைத் தேடிச்சென்றபோது பார்வதிக்கு ஆச்சரியமேற்பட்டு அவள் சிவபிரானிடங் கூறுவாள்.

"நீங்கள் ஸ்ரீராமன் பரிபூரணன் என்று ஸ்தோத்தரித்திருக்கிறீர்கள். ஆனால் அவர் சீதையை இழந்து இப்பொழுது நடந்துகொள்வதைப் பாருங்கள்" என்றார்.

சிவபிரான் கூறியதாவது:- ஸ்ரீ ராமனுடைய பரிபூரணத்துவத்தில் உனக்கு ஐயமிருக்குமானால் பரீட்சித்துப்பார். நீயே சீதாவாகமாறி அவர்முன் தோன்று."

பார்வதி அவ்வாறே செய்தாள். ஆனால் ராமன் அவளைக் கண்ணெடுத்தும் நோக்காது ஒரு குருடன்போல ஹா சீதா! ஹா சீதா! வெனக் கூறிக்கொண்டே சென்றார், பார்வதி வியப்புற்றாள். சந்தேகமும் தெளிந்தது.

மற்றெருவர் சிற்றின்ப இச்சைகளையும் ஞாபகங்களையும் எவ்வாறு ஒழிப்பதென்று கேட்டார்.

ஸ்ரீ மக:- ஆத்மாவையே உடலாக நினைக்கும் தவறான எண்ணத்தை ஒழிப்பதால் சாத்தியமாகும். ஆத்மாவுக்கு ஆண் பெண் பேதம் கிடையாது.

கேள்வி:- ஆனால் அதை அடைவதெப்படி?

ஸ்ரீ மக:- நீங்கள் உங்களை உடலாக நினைக்கும்பொழுது மற்றவர்களையும் உடலாக நினைக்கிறீர்கள். ஆகவே தான் ஆண் பெண் வித்யாஸம் ஏற்படுகிறது. நீங்கள் ஆத்மாவே என்று இருங்கள். அப்பொழுது ஆண்பெண் வித்தியாசம் ஏற்படாது.

புகையிலைக்குப் பசளையிடுவது

சரியான முறையில் பசளையிடுவதினால் மாத்திரமே ஏராளமான பயிர்களையும் இலாபத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு கொம்போஸ்ட் கம்பனியாரின் புகையிலைப் பசளைக்கலவை சரியான முறையாகப் பாவிக்கப்பட்டால் விசேஷ லாபகரமான ஆதாயத்தைக் கொடுக்கும்.

முழுவிபரங்களும் இன்னும் வேண்டிய புத்திமதிகளும் இலவசமாக அறிந்துகொள்ளலாம், கொழும்பு கொம்போஸ்ட் கம்பனி லிமிட்டெட், கொழும்பு என்ற விலாசத்துக்கு எழுதவும்.

H. 200. 13-11-35 to 12-5-36.) ஜ

# சைவ பரிபாலன சபை.

## 1905-ம் ஆண்டில் நிகழ்ந்தவை.

(13-4-36-ன் தொடர்.)

### Sivakamiththai Exhibition.

வண்ணார்பண்ணை மேற்கில் கல்லுத் தண்ணீர்க் கிணற்றடியிலே பிரபலமுற்ற தாரு கா. வேலுப்பிள்ளையின் தருமபத்தினி சிவகாமித்தாய், 1905ஆ ஆடிமீ 4உ வண்-வைத்தீஸ்வரசுவாமிகோயில் மேலைத வீதியிலேயிருக்கும் 1000 ரூபா பெறுமதியுள்ள "பிள்ளையான் வளவு" என்னும் 3 3/8 கிலப்பரப்பு விசாலமுள்ள நிலத்திலும் அதற்கு சேர்ந்த கட்டடத்திலும் சொரியலாயவரைவாசியை இந்துக்கல்லூரிக்குத் தருமசாதனம்செய்து, அதன் வருவாயைக்கொண்டு கந்தபுராணமகற்றுத் தேறியவராயும் சைவாசாரமுடையவராயும் உள்ள இக்கல்லூரி மாணவர் ஒருவருக்கு அல்லது பலருக்கு, தனதுபெயரால் ஓர் வித்தியா பரிசு ஏற்படுத்தி வருஷந்தோறும் உதவிவரும் பொருட்டு ஏற்பாடு செய்திருக்கிறு. இது அன்றி இவளின் பத்தா வேலுப்பிள்ளை இந்துக்கல்லூரிக்கு முன்னும் பொருளுதவி புரிந்துள்ளனர். இது நிற்க,

இலங்கைத்தேசாதிபதியாயிருந்த Sir Henry Blake யாழ்ப்பாணம் வந்திருந்தபோது 1905 ஆ ஆவணிமீ 24உ இந்துக்கல்லூரிக்கு சென்று பிள்ளைகளை வகுப்புகளிலே பார்த்து மகிழ்ந்து கல்லூரி மேன்மேலும் விருத்தியடையும்வண்ணம் பிரார்த்தித்துச் சென்றார். "....... Inspected the Classes at work. His Excellency Wished Success to the College" இது நிற்க,

இலங்கையிலுள்ள கல்லூரிகள் பல கல்கத்தாச் சர்வகலாசாலையோடிணைக்கப்பட்ட பின் இலங்கையிலிருந்து பல மாணவர் மேற்படி சர்வகலாசாலையாரால் நடத்தப்பட்ட பிரவேசபரீக்ஷை F. A. பரீக்ஷை B. A பரீக்ஷை முதலிய பரீக்ஷைகளுக்குச் சென்று வந்தார்கள். 1905-ம் ஆண்டில் அக்கலாசாலையார் இலங்கையில் மேற்படி பரீக்ஷைகளை நடத்தாதுவிட்டார்கள். இதனைக் கண்ட சென்னைச் சர்வகலாசாலையார் தங்கள் பரீக்ஷைகளை இலங்கையிலே நடத்த முன் வந்து இங்குள்ள கல்லூரிகள் தங்கள் சென்னைச் சர்வகலாசாலையோடிணைக்கப்படலாமென்றும் அக்கல்லூரிகளில் கற்கும் மாணவர்கள் பிரதம பரீக்ஷை, matriculation பரீக்ஷை F. A. பரீக்ஷை, B A. பரீக்ஷை முதலிய பரீக்ஷைகளுக்குப் போகலாம் என்றும் தீர்மானித்தார்கள். இதை அறிந்த இந்துக்கல்லூரி அதிகார சபையார் தங்கள் கல்லூரியையும் சென்னைச்சர்வகலாசாலையோடிணைக்கத் தீர்மானித்தார்கள். இதற்கு இன்றியமையாது வேண்டிய விஞ்ஞானசாலை சிலம்பசாலைகள் அமைப்பதற்கும் இரசாயனம் முதலிய சாஸ்திரங்கள் கற்பிப்பதற்கு வேண்டிய உபகரணங்களை அமைப்பிப்பதற்கும் பணம் வேண்டியதாயிருக்கிறதென்று விண்ணப்பம்செய்தார்கள். இதைக்கண்ட கொழும்பு பொ. குமாரசுவாமி 500 ரூபாவும், அவரது சகோதரர் பொ. அருணாசலம் 200 ரூபாவும், சேர் முத்துக்குமாரசுவாமியின் புத்திரர் ஆநந்தக்குமாரசுவாமி 100 ரூபாவும் கோலாலம்பூரிலிருந்து R. துரைசுவாமிப்பிள்ளை என்பவர் 100 ரூபாவும், யாழ்ப்பாணம் மணியகாரனாயிருந்த மு. தம்பாபிள்ளை முதலியார் 247 ரூபா 50 சதமும் சிங்கப்பூரிலிருந்து C. தம்பாபிள்ளை 22 ரூபாவும், R. ஆறுமுகம் 15 ரூபாவும், காரை சிவசிதம்பரஐயர் 10 ரூபாவும் அனுப்பினார்கள். வேறு சிலரும் தங்கள் தங்களாலியன்ற தொகை அனுப்பினார்கள். இது நிற்க,

### இராமஞ்செட்டியார் கூபம்.

இந்துக்கல்லூரியிலே மிக்க அபிமானம் உடையவரும் இச்சபையார் பற்றுவரவுசெய்துவந்த ராம. மெ. சித. கடைக்கு ஏஜன்டாயிருந்தவருமாகிய தேவகோட்டை கா. இராமஞ்செட்டியார் தமது சொந்தப் பொறுப்பில் பெரும் பொருள் உபகரிக்கவும் தம்மவர்கள் சிலரைக் கொண்டு உபகரிப்பிக்கவும் விரும்பியிருந்தார். இக்கல்லூரிக் கட்டடத்துக்கு வடகிழக்கிலிருக்கும் பெரிய கிணற்றைத் தோண்டுவித்துக்கட்டுவித்தவர் இந்த (இங்கிலீஸ்) இராமஞ்செட்டியாரே என்பது அக்கிணற்றுக்கட்டிலிருக்கும் சிலாசாதனத்தினாலும் அறியலாகும். இது நிற்க,

இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியர் N. செல்வத்துரைக்கு 1905ம் ஆண்டில் மாசம் ஒன்றுக்கு 135 ரூபா வேதனம் கொடுக்கப்பட்டு வந்தது. 1905ஆ ஐப்பசிமீ 16உ கூடிய இந்துக்கல்லூரி நிருவாக சபைக் கூட்டத்தில், பசுபதிச் செட்டியார் அவர் வேதனத்தை 150 ரூபாவாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று பிரேரித்து அவ்விதம் நிறைவேறச் செய்து, அப்போது தாம் அசௌக்கியமுற்றிருந்தமையால் இச்சபையினதும் இந்துக்கல்லூரியினதும் தனாதிகாரியாகப் பொறுப்பு வகித்துக் கருமம் ஆற்ற இயலாதிருப்பதால்வேறொருவரைத் தனாதிகாரியாக நியமித்துக்கொள்ளும்படி சொல்லி தான் உள்ளன்போடும் நேசித்துவந்த தன் கண்பர்களாகிய அச் சபையாரிடம் பிரியாவிடை பெறுவதற்காகவே தான் அன்று அங்கு வந்ததென்றும் சொன்னாராம். பின்னும் இக்கல்லூரியிலே பல வருஷங்களாக சிரத்தையோடு கற்பித்துவந்த N செல்வத்துரை, மா. சபாபதி, சி. காசிப்பிள்ளை, வி. தம்பையா முதலானஉபாத்தியாயர்களிடத்தில் தமக்கிருந்த அபிமானத்தைப் பற்றிச்சொல்லி அவர்களுக்காயினும் இளைப்பாறும் காலத்தில் உபகார வேதனம் அதன் வட்டியிலிருந்து உதவிவரத்தக்க ஒரு முதலைத்திரட்டி வைக்கவேண்டுமென்று பல வருஷங்களாகத் தாம் எண்ணி அதற்காக முயற்சிசெய்தும் அக்காலத்திருந்த பணநிலைமையும் நிருவாக சபையார் சிலருள் இருந்த அபிப்பிராயபேதமும் அதற்குத் தடையாயிருந்ததென்றுங் கூறிவிட்டு, அக்காலத்தில் பூர்த்தியாகாதிருந்த வடபாகக் கட்டடத்தையும் கட்டிப் பூர்த்திபண்ணித் தம் கண்ணாரப் பார்க்கவேண்டுமென்று தமக்கிருந்த பேரவா எத்தன்மையதென்பதைச் சொல்லாலே சொல்லி விளக்கமுடியாதென்றும் கூறி, அப்பேறு தமக்குக் கிடைக்காவிட்டாலும் (அங்கிருந்த மற்றைய அங்கத்தவர்களை விளித்து) அவர்களுக்கு சீக்கிரத்தில் கிடைக்கும் வண்ணம் நடேசப்பெருமான் கிருபைசெய்வாரென்று சொல்லி அவர்களிடத்திற் பிரியாவிடை பெற்று, "Good-bye Mr. பத்திராதிபர்!" என்று அங்கிருந்த அ. சபாபதியை விளித்து அவரைத் தனிஇடத்தில் அழைத்துக் கல்லூரி விஷயமாக மற்றைய அங்கத்தவரெவருக்கும் தெரியாத சில விஷயங்கள்சொல்லியுள்ளாராம். அன்று இச்சபை லேககராயிருந்த வி. காசிப்பிள்ளையையே சிறிது காலத்திற்குத் தனாதிகாரியாகவும் கடமைபார்த்துவரும்படி சபையார் நியமித்தார்கள். அக் காட்களில் சபையினதும் கல்லூரியினதும் கணக்குகளை எல்லாம் பரிசோதனை (Audit) செய்ததில் 8 ரூபா 60 சதம் திட்டக்குறைவு ஏற்பட்டது. அதைப் பசுபதிச் செட்டியார் உடனே செலுத்திவிட்டார். இது நிற்க,

### X பரிசளிப்பு.

இந்துக்கல்லூரி மாணவர்களுக்கு 1905ஆ ஐப்பசிமீ 28உ அக்காலத்தில் இங்கு வந்திருந்த வித்தியாகர்த்தர் J. Harward M. A. தலைமையில் பரிசளிக்கப்பட்டது. அப்போது பிரதமாசிரியர் N. செல்வத்துரை வாசித்த அறிக்கைப் பத்திரம் இது:—

Strength and Attendance,

"The number of boys on roll in December 1903 was 358. The number on roll in December 1904 was 441. There are now 434 boys, 384 in the School Department and 50 in the College classes —(தொடரு )

# Nethrananda Thailaya

**Ceylon's Premier Curative Medicine Oil.**

## நேத்திரானந்த தைலம்.

**இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவேமுதல்தரம்.**

**6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50.**
**தபாற்கூலி 45 சதம்.**



இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை இந்த நிமிஷத்திற்குள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதைபடர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை நரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையும் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடி போடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயது வித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகியபெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் சீமாட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள், வெளிவந்திருக்கும் ஏனைய போலித்தைலங்களைப்போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

மனிதர் முக்கியமாகத் தெரிந்துசொல்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும் 35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்

**இந்த நேத்திரானந்த தைலமே.**

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்ட பெயர் உண்டு என்று வார்த்தைதிரிகிற ஒவ்வொரு சிறபிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலை மயக்கம், கண் எரிவு, தலைவலி, இள நரை, தலைமுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினால் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்தில் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப்பட்டுள்ளது.

தலைமை ஸ்தானம்:—
வைத்தியசேகர முதலியார்,
டப்ளியு. டானியல் பெர்னாண்டோ,
ஸ்ரீவேத வளவும், பாணதுறை.

கிளை ஸ்தானம்:—
பௌத்தமந்திர வைத்தியசாலை.
நோரிஸ்ரோட், கொழும்பு—இலங்கை
காவலி ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:—வேத முதலியார் பாணதுறை.
(H 332. 20-3-36 to 19-9-36)

---

# கொய்லன் வங்கி
# (லிமிற்றெட்)
## (1919-ம் ஆண்டு திருவாங்கூரிற் பதிவுசெய்யப்பட்டது)
# யாழ்ப்பாணம்.

காலங் குறிக்கப்பட்ட வைப்புப்பணம்
( FIXED DEPOSITS )

எங்கள் வங்கியில் க்ஷேமிக்கும்படி தரப்படும் வைப்புப்பணத்திற்குப் பின்வரும் விகிதமான வட்டி கொடுக்க நிர்ணயஞ் செய்திருக்கிறேம்.

| | |
|---|---|
| 6 மாச காலம் | 3½ விகிதம் |
| 12 மாச காலம் | 4½ விகிதம் |
| 24 மாச காலம் | 5 விகிதம் |

ஏனைய விபரங்களை எங்களிடம் வினவியறிந்துகொள்ளலாம்.

**V. C. ஓமன் B. A.**
யாழ்ப்பாண ஏஜன்ற்

Y. 71 23-5 to. 22-5-36

---

## கோடைகாலத்திற் பீடிக்கும்

## தலைவலியைத் தடுப்பதற்காக

## ஒரு போத்தல்

# லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்

# தைலத்தை

## வாங்கி வைத்திருங்கள்

இந்தியாவில் சிறந்ததும் முதன்மையானதும்

Y 53. 1-1—31-12-36)

---

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக்குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுபதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை என் விளம்பரத்தில் உலகை நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, ஜலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாரு, சாலாமூஸ்லி, சப்பேமுத்லிலி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதப்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரசப்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் திரும் ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்துதேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர்பினுக்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததனுல் முன் மனிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
**க. ஆறுமுகம்பிள்ளை,**
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்ற,
மட்டக்களப்பு.

Y55 1-1-34 to 31-12-36) சிலோன்.

---

வண்ணைநகர்

தையல்நாயகி

## கலிவெண்பா

## திருவூஞ்சல்

முத்துக்குமாரசுவாமி

## திருவூஞ்சல்,

இவை இப்பொழுது தெளிவாக அச்சிடப்பெற்று ஒரே பிரதியாக வெளிவந்துள்ளன.

விலை சதம் 5.

மானேஜர்,
சைவப்பிரகாசயந்திரசாலை,
வண்ணார்பண்ணை.

---

## விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி, செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1 | பந்தி (கலம்) | ரூபா | 10-00 |
| ½ | ,, ,, | ,, | 5-50 |
| ¼ | ,, ,, | ,, | 3-00 |
| 1 | அங்குலம் | ,, | 1-00 |

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை.

---

“இரதி மன்மத”
# சுகானந்த லேகியம்.

க்ஷயம் - ஸ்வாஸகாஸம் - மேகம் - குன்மம் முதலிய கொடூரமான வியாதிகளையும், வீரியஅழிவு, மலபந்தம், அஜீர்ணம், சரீரமெலிவு, மூளைரிச்சல் முதலிய சர்வவியாதிகளையும் போக்கி, இரத்தத்தை விருத்திப்படுத்தி, ஆண்மையூட்டி கிழவர்களுக்கும் கூட யௌவனத்தை உண்டுபண்ணிச் சுகமனுபவிக்கச்செய்வதில், இதற்கு நிகரான “சித்த” ஔஷதம் வேறுகிடையாது:—

ஓர் முறை பரீக்ஷியுங்கள்.

பூரணசுகத்திற்குப் போதுமான 40 நாட்கள் சாப்பிடக்கூடிய ஔஷதத்தின் விலை ரூபா } 4 0 0
தபால்சார்ஜ வேறு.

**N. B.** முழுவிவரங்களடங்கிய “ஔஷத பூஷணம்” வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

விலாசம்:—
மலையாள **“சித்த” ஔஷதாஸ்ரமம்,**
2 மெயின்ரோட்,
கொல்லம், **Quilon S. India.**

H 208. 1-12-35 to 31-5 36

---

திறம் தேக்கமரம் — பவுண்மார்க் கோளுக்கி ஓடு.

மிகத்தொகையாக இப்பொழுது வந்திருக்கின்றன.

| | |
|---|---|
| சீயம் தேக்கமரங்கள் | ரூபா 2-60சதந் தொடக்கம் |
| றங்கூன் தேக்கமரங்கள் | ரூபா 2-75சதந் தொடக்கம் |

## இன்னொரு பிரதான விளம்பரம்.

நாங்கள் எங்கள் காசுக்கடையில், ஈடுபிடிக்கும் நகைகள் விஷயத்தில் 100 ரூபாவிற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் இதுவரையிலிருந்த 12 விகித வட்டியைத் தவிர்த்து 9 விகிதமாகக் குறைத்துக்கொண்டோம் என்பதாம்.

திறமான பொருள், நேர்மையான வியாபாரம் சகாயமான விலை இவைகளில் எங்கள் கடையே பேர் பெற்றது.

பவுண் “மார்க்” ஓடுகள் விசேஷமானவை

**சி. வீரகத்திப்பிள்ளை** அண்டு சன்ஸ்
(Y 57. 1-5-35to30-4-36.) பெரியகடைத்தெரு, பாங்ஷல் வீதி.

---

## பத்திரக் கிரயம்.

( முற்பணமாக அனுப்புதல் வேண்டும். )

| யாழ்ப்பாணப் பட்டினம் | தமிழ் | ஆங்கிலம் | இருபிரதிகளும் |
|---|---|---|---|
| | ரு. ச. | ரு. ச. | ரு. ச. |
| (நகரசங்க எல்லைக்குட்பட) | | | |
| ஒருவருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 9 - 00 |
| ½ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 00 | 2 - 00 | 3 - 75 |
| இலங்கை இந்தியா | | | |
| ஒருவருடத்திற்கு | 8 - 00 | 8 - 00 | 12 - 00 |
| ½ வருடத்திற்கு | 4 - 50 | 4 - 50 | 7 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 50 | 2 - 50 | 4 - 50 |
| சிங்கப்பூர் முதலிய அந்நிய நாடுகள் | | | |
| ஒருவருடத்திற்கு | 9 - 00 | 9 - 00 | 13 - 00 |
| ½ வருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 7 - 50 |
| ¼ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |

தனிப்பிரதி சதம் 5

கொழும்பு தனிப்பிரதிநிதி:-

ப. மு. ரா. முத்துச்சாமி ரெட்டியார்,
“நியூஸ் மார்ட்”
89. கோவில்தெரு,
கும்பனித்தெரு.

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

---

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, 27th April 1936